பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 07 வெள்ளிக்கிழமை (23.11.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 357

## சிறிபதி வீட்டுக்கு நேற்றுக் குண்டுவீச்சு!

கொழும்பு, நவ.23

கொழும்பு, பொரளை, ஒஸ்ரின் பிளேஸில் உள்ள சிறிபதி சூரியாராய்ச்சி எம்.பியின் வீட்டின் மீது, ஓட்டோவில் வந்த இனந்தெரியாதோர் நேற்றிரவு 8.15 மணியளவில் இரு பெற்றோல் குண்டுகளை வீசிவிட்டுத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## 3 அதிரடிப்படையினர் அம்பாறையில் பலி!

கொழும்பு, நவ. 23

அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை நகரிலிருந்து தென்மேற்கே சுமார் முப்பது கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பக்மிட்டிய பகுதியில் விசேட அதிரடிப் படையினரின் காவல் நிலை ஒன்றின் மீது நேற்று மாலை 5 மணியளவில் புலிகள்

(10ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவப் பயன்பாட்டு உணவு வகைகள் 'யுனிசெவ்' மூலம் வன்னியில் புலிகளுக்கு!

### நாடாளுமன்றத்தில் அந்த அமைப்பு மீது மீண்டும் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.23

இராணுவத்தினருக்குரிய - களச் சமர்களின் போது பயன்படுத்தப்படுகின்ற - உணவு வகைகள் 'யுனிசெவ்' அமைப்பினால் நாட்டுக்குள் கடத்தி வரப்பட்டு கிளிநொச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டிருப்பதாக ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் பிரசாரச் செயலாளருமான விமல் வீரவன்ஸ குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

நேற்று நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுப் பேசுகையிலேயே இக்குற்றச்சாட்டை அவர் முன்வைத்தார்.

அங்கு அவர் கூறியவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி நிறுவனங்களில் ஒன்றான 'யுனிசெவ்' நிறுவனம் இலங்கையில் செயல்படும் முறை தொடர்பாக இதற்கு முன்னரும் இந்தச் சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளேன்.

அப்போது ஒரு வருட காலத்துக்குள் 10 கோடி ரூபாவை 'ரி.ஆர்.ஓ.' என்ற புலிப் பயங்கரவாதிகளின் கூலி அமைப்பின் ஊடாக புலிப் பயங்கரவாதிகளுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்ட விதம் தொடர்பாக நான் சுட்டிக்காட்டினேன்.

'யுனிசெவ்' என்ற இந்த ஐ.நா. சபைக்குச் சொந்தமான நிறுவனத்தின் மற்றுமொரு பயங்கரச் செயலைப் பற்றி இன்று இந்தச் சபையின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(09ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேச்சு நடத்துமாறு அரசை வற்புறுத்துகிறது இந்தியா



## தீர்வு யோசனையை விரைவில் வெளியிடவும் அறிவுறுத்து



கம்பாலா,நவம்பர் 23

★ இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக விடுதலைப் புலிகளோடு அமைதிப் பேச்சுகளை நடத்துங்கள்.

★ அமைதித் தீர்வுக்கான அதிகாரப் பரவலாக்கல் யோசனையை மேலும் தாமதிக்காமல் உடன் வெளியிட்டு அதை நடைமுறைப்படுத்துங்கள்.

- இவ்வாறு இலங்கையை வற்புறுத்தியிருக்கின்றது இந்தியா.

இரு நாடுகளினதும் வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையேயான சந்திப்பின்போதே இவ்வாறு வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

உகண்டாவின் கம்பாலாவில் நடைபெறும் பொதுநல அமைப்பு நாடுகளின் தலைவர்கள் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக அங்கு சென்றிருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவும் நேற்றுமுன்தினம் அங்கு சுமார் நாற்பது நிமிட நேரம் சந்தித்துப் பேசினர்.

அப்போதே அமைதி முயற்சிகள் தொடர்பாக விடுதலைப் புலிகளோடு தாமதிக்காமல் பேச்சுகளை நடத்தும்படியும், தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கான யோசனைத் திட்டத்தை விரைந்து வெளியிட்டு அதை நடைமுறைப்படுத்தும்படியும் இலங்கையை இந்தியா வற்புறுத்தியிருக்கின்றது.

மிதவாதத் தமிழர்களும், இலங்கையின்

(10ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு ஆயுதம் வழங்குவதை எதிர்த்து இந்திய நாடாளுமன்றம் முன் ஆர்ப்பாட்டம்

சென்னை, நவ. 23

இலங்கை அரசிற்கு இந்திய அரசு ஆயுத உதவிகள் வழங்குவதற்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி இந்திய நாடாளுமன்றம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று பெரியார் திராவிடர் கழகத்தின் ஆட்சிக் குழு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்னை காமராஜர் சாலையில் உள்ள அலுவலகத்தில் கொளத்தூர் மணி தலைமையில் கழகத்தின் ஆட்சிக்குழுக்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமர் கொலையின் மர்மம்; விசாரிக்க ஆணைக்குழு நியமிக்குக!

### ஜனாதிபதிக்கு சிறிபதி சூரியாராச்சி கடிதம்

கொழும்பு, நவ. 23

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் க்திர்காமர் கொலைச் சூத்திரதாரிகள் விடுவிக்கப்பட்ட பின்னணி குறித்து விசாரிக்க ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்றும் சிறிபதி சூரியாராய்ச்சி எம்.பி. கோரியிருக்கிறார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்டமைக்குச் சதித் தீட்டியவர்கள், அதற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள், அக்கொலையை மேற்கொண்டவர்கள் ஆகியோர் குறித்தும், அக்கொலைக்குப் பொறுப்புக் கூற வேண்டியவரெனக் கைதுசெய்யப்பட்ட சார்ள்ஸ் ஞானக்கோன் விடுதலை செய்யப்பட்

(10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு இங்கு தடை விதிப்பதற்கு முடிவு

கொழும்பு, நவ. 23

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தை தடைசெய்வதற்கு அமைச்சரவை நேற்றுமுன்தினம் முடிவு செய்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கானமுடிவு எடுக்கப்பட்டதாக நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக் கப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தை இலங்கையிலும் தடை செய்ய வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் பிரேரித்த யோசனையை ஏற்றுக்கொள்வது என அமைச்சரவை தீர்மானித்தது.

இலங்கை அரசு தன்னோடு தொடர்புடைய ஏனைய நாடுகளையும் அந்தந்த நாடுகளில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைத் தடைசெய்ய வேண்டும் எனக் கோரவேண்

(10ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டின் அரச வைத்தியசாலைகளுக்கு 66 வைத்தியர்கள் செவ்வாய் முதல் நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ். மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு 66 வைத்திய அதிகாரிகள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சு கடந்த 20ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனங்களை வழங்கியுள்ளது.

இந்த 66 வைத்தியர்களில் 42 பேர் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் 24 பேர் ஏனைய பிரதேச வைத்தியசாலைகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளோரில் 24 பேர் கடந்த ஆண்டு போதனா வைத்தியசாலையில் உள்ளகப் பயிற்சியை முடித்த பின்னர் தொடர்ந்து அங்கு வைத்தியர்களாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றனர். ஏனைய 18 பேரும் வெளி இடங்களில் இருந்து நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய பிரதேச வைத்தியசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள 24 பேரில் 5

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர்கள் இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு,நவ.23

'த லீடர்' வெளியீட்டகத்தின் அச்சகத்துக்குள் அத்துமீறி நுழைந்த ஆயுததாரிகள், அதன் அச்சகப் பிரிவுக்கு பெற்றோல் ஊற்றித் தீமூட்டி நாசப்படுத்திய அதிர்ச்சிச் சம்பவத்தைக் கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட ஊடக அடக்குமுறைக்கு எதிரான இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் இன்று வெள்

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழையைத் தொடர்ந்து விவசாயிகள் மும்முரம்

வலி.கிழக்கு,நவ.23

தற்போது பெய்து வரும் பருவகால மழையினால் வலி.கிழக்கு பிரதேச வயல் நிலங்களில் கருகும் நிலையில் இருந்த நெற்பயிர்கள் ஓரளவு தலையெடுத்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வயல்களில் தண்ணீர் இன்றி நெற்பயிர்கள் வாடிய நிலையில் இருந்ததாகவும் தற்போது பெய்துவரும் மழையை அடுத்து பயிர்கள் ஓரளவு செழித்து காணப்படுவதாகவும் அவர்கள் கூறினர்.

மழையை அடுத்துவிவசாயிகள் செயல்களில் நெற்பயிர்களுக்கு பசளை இடுவதிலும் மருந்து விசிறுவதிலும் களை பிடுங்குவதிலும் மும்முரமாக ஈடுபடுவதைக் காண முடிகிறது. (அ-228)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 24.10.2007 அன்று
சிவபதமடைந்த
அமரர்
**வல்லிபுரம் மகேந்திரராசா**
(மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் இணைத் தலைவரும் ஓய்வுபெற்ற தபால் அதிபரும் சமாதான நீதிவானும்)

அன்னாரின் பிரிவு எமது அபிவிருத்திச் சபைக்கு பேரிழப்பாகும். அவரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மருதடி விநாயகரை இருகரம் கூப்பி இறைஞ்சுகின்றோம்.

தகவல்:
மருந்தக மகப்பேற்றுமனை அபிவிருத்திச் சபையினர்.

*அதிகார் செல்லமுத்து வீதி,*
*மானிப்பாய், நவாலி.* (68177)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சின்னையா மயில்வாகனம்**

மலர்வு 28.12.1920 — உதிர்வு 02.12.2006

அன்பின் திருவுருவே
பாசத்தின் உறைவிடமே
எம்மை எல்லாம் வாழவைத்த அப்பாவே!
ஓராண்டு ஆனதோ
நீங்கள் எம்மைப் பிரிந்து.

*கந்தசுவாமி கோயிலடி,*
*கோப்பாய் வடக்கு.* (68090)

தகவல்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 15.03.1934 — விண்ணில் 25.10.2007



**அமரர் செல்லையா செல்வரத்தினம்**

தாங்க முடியாத வேதனையில் தவித்து
இங்கிருந்து மனையாள் புலம்ப
எங்குதான் எங்கள் தந்தையை இனிக்
காண்போமென மக்கள் மருமக்கள் பேரர்
இங்கிருந்தும் தூர இருந்தும் விழி நீர் சொரிய
அண்ணா என்று சோதரரும் மாமாவென்று
மருமக்களும் பெரியப்பாவென்று பெறாமக்களும்
உறவு சொல்ல இங்கில்லையோ என ஏங்கிநிற்க
கண்ணெனக் காத்து வளர்த்த அருமைப் பேரன்
அரவணைக்க இல்லையே எங்கே? எங்கே?
எப்போ வருவார் என்று தேடி அலைய
வாழ்ந்தது போதுமென்றோ
வானுலகம் சென்றனையோ?

**நன்றி நவிலல்:**

எங்கள் தந்தையின் இறுதிச்சடங்கில் நேரடியாகவும், உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும், தந்திமூலமும், தொலைபேசி மூலமும் துயரைப் பகிர்ந்து கொண்ட உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், குருமட மாணவர்கள் மற்றும் GTZ/ REPSL NRP உத்தியோகத்தர் கள், முனபள்ளி இணைப்பாளர்கள், ஆசிரியர்கள், புனித சாள்ஸ்மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பலவழிகளில் தோளோடு தோள் நின்று உதவிபுரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் மலர் வளையம் சாத்தி அஞ்சலி செட்தோர் அனைவருக்கும் உள்ளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன்-

அன்னாரின் ஆன்மசாந்திக்காக நாளை (24.11.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியிலும் தொடர்ந்து இடம்பெறும் நன்றி வழிபாட்டிலும் கலந்து அன்னாரது ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

இல.187, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (68172) நிரந்தரமுகவரி [illegible]

## சித்தன்கேணியில் சாயி நிகழ்வுகள்

சங்கானை,நவ.23

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 82ஆவது அவதார தினத்தை ஒட்டி இன்று சித்தன் கேணி சத்யசாயி சேவா நிலையத்தில் விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

காலை 5.30 மணிக்கு ஓம்காரத்துடன் ஆரம்பமாகும் நிகழ்வு காலையும் மாலையும் என இரு கட்டங்களாக இடம்பெறும்.

இளைஞர் பிரிவு மாணவர்களின் பாடல், சிறப்பு சொற்பொழிவு உட்பட பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன (1)

## பன்னிரு திருமுறை பாராயணம்

யாழ்ப்பாணம்,நவ.23

அகில இலங்கைத் திருமுறைமன்றம் மாதாந்த பௌர்ணமித் தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம், போற்றி அர்ச்சனை ஆகியன நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் யாழ். நாவலர் வீதி, கடையிற்சுவாமி குருவார அன்னசத்திர சிவன் ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

ஆலய பரிபாலகரின் அனுசரணையுடன் மன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாய கம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும். (1)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

மூன்று மாதங்களில் சரளமாக கதைக்கப் பயில By. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 [302], K.K.S. வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி. சங்கானை.

"THE ROYAL IS THE BEST"

## 31ஆம் நாள் துயர் பகிர்வு

எமது துறையைச் சேர்ந்த சக மாணவி
செல்வி சு.சுகிர்தா
அவர்களின் பாசமிகு தந்தை
**க.சுப்பிரமணியம்**
அவர்களின் பிரிவால் கலங்கி நிற்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
அவரின் ஆத்மசாந்திக்காகப்
பிரர்த்திக்கின்றோம்.
3.ஆம் வருட முகாமைத்துவதுறை
மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம். (68184)

## மழை வெள்ளம் தேக்கம்

நல்லூர்,நவ.23

யாழ்ப்பாணம் - தீவுப் பகுதிக்கான பிரதான வீதியில் யாழ். சத்திரச் சந்தி வீதியில் வெள்ளம் தேங்கி நிற்கிறது. இதனால் அந்த இடத்தில் வாகனங்களுக்காகக் காத்து நிற்கும் அரச ஊழியர்கள், பொது மக்கள் அனைவரும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

வீதியில் நிற்கும் பயணிகள் வேகமாக வந்து செல்லும் வாகனங்களினால் சிதறி வீசப்படும் மழை நீரால் தமது உடைகள் அசுத்தமடைவதாகக் கூறுகின்றனர்.

தீவுப் பகுதியில் இருந்து விற்பனைக்காக தமது பொருள்களை எடுத்து வரும் மக்கள் உட்பட தீவுப் பகுதிக்குக் கடமைக்காக செல்லும் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பெருமளவானோர் நடமாகும் இடமாக இது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-111)

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி பிரதேச சபை தொழில்நுட்ப
உத்தியோகத்தர்
**வேலுப்பிள்ளை**
**சபாபதிப்பிள்ளை**
அவர்களின் அகால மரணத்தால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தவர்களின் துயரில்
நாமும் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்ம
சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம்.
(சி-54458)

## கண்ணீர் அஞ்சலி

அமரர் லயன் **சின்னத்தம்பி சற்குணநாதன்** (T.A)



(நீர்ப்பாசனப் பொறியியலாளர், லயன்ஸ் உறுப்பினர், உரிமையாளர், ஐங்கரன் கட்டடப் பொருள் (BMC) கூட்டுத்தாபனம், சாவகச்சேரி)

*மீசாலை மேற்கு, மீசாலையை வதிவிடமாகவும் கட்டுவன், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொண்ட லயன் சி.சற்குணநாதன் சாவகச்சேரி லயன்ஸ் கழக நீண்டகால உறுப்பினர். சேவையாளன். லண்டனில் 18.11.2007இல் சிவபதமடைந்துள்ளார். இவரது இழப்பு எமது கழகத்திற்கு மிகுந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. எங்களின் ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

ஓம் சாந்தி!

*நினைத்துனை நன்றி செயினும் பனைத்துணையாக்*
*கொள்வர் பயன் தெரிவர் - குறள் 104*

**சாவகச்சேரி லயன்ஸ் கழகம்.**

(சி/54448)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை சபாபதிப்பிள்ளை

*(தொழில்நுட்ப உத்தியோகத்தர்*
*பிரதேச சபை சாவகச்சேரி)*

வரணி, இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் தென்னிங்கவத்தை, புலோலி மேற்கை (தம்பசிட்டி) வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சபாபதிப்பிள்ளை (21.11.2007) புதன் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் நிர்மலாதேவியின் அன்புக் கணவரும் துவாரகன், கோபிதன், அபிநயா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, கண்ணகை ஆகியோரின் மகனும் கோ.சபாபதிப்பிள்ளை- வள்ளிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும் கணபதிப்பிள்ளை, தங்கமுத்து, காலஞ்சென்ற சுப்பிரமணியம், தங்கராசா, சுமதி, சிவானந்தம் ஆகியோரின் சகோதரனும் அற்புதராணி, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, சாரதா, விக்கினேஸ்வரன், சிவாஜினி, இராசேந்திரம், ஜெயரஞ்சினி, நரேந்திரன் ஆகியோரின் மைத்துனனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2007) வெள்ளிக் கிழமை மு.ப.10 மணியளவில் வரணி- இயற்றாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வரணி - இயற்றாலை,*
*வரணி.* (68178)

தகவல்:
குடும்பத்தினர்.

### சிதம்பரநாதன் லீலாவதி



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் அல்லாரை வடக்கு, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரநாதன் லீலாவதி 21.11.2007 புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் சிதம்பரநாதனின் (ஓய்வுபெற்ற அதிபர்) பாசமிகு மனைவியும் யோகேந்திரா (பிரான்ஸ்), சந்திரமலர் (லண்டன்), இரஞ்சிதமலர் (அமரர்), ஜெயந்திமலர், யோகசுகிர்தமலர் (பிரான்ஸ்), ஸ்ரீகஜேந்திரா (கொழும்பு), ஸ்ரீரவீந்திரா (பிரான்ஸ்), ஸ்ரீசுவேந்திரா (பிரான்ஸ்), மேகேந்திரா (பிரான்ஸ்), பவளேந்திரா (பிரான்ஸ்), சர்மிளா ஆகியோரின் பாசமிகு தாயும் லோமதி, சிவநேசச்செல்வன் (முரசுமோட்டை), குணசேகரம் (பிரான்ஸ்), புவிராசசிங்கம் (பிரான்ஸ்), இன்பராணி (கொழும்பு), சுயாத்தா (பிரான்ஸ்), அனுசியா (பிரான்ஸ்), யோகேஸ்வரி (பிரான்ஸ்), செந்தூரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியும் சுவாமிநாதன் (அமரர்), இராமநாதன் (அமரர்), துரைராசன் (ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர்), திலகவதி, கமலாவதி, மனோகரன் (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்), யோகநாதன் (அமரர்), சரஸ்வதி (தேர்தல் அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரியும் நடராசன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), குலசேகரம் (ஓய்வுபெற்ற உப அதிபர்), சிதம்பரநாதன் (நீதிமன்றம், சாவகச்சேரி), பரமேஸ்வரி, கிளி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் அஜந்தன், அர்ச்சுனன், அனுசியா, அர்ச்சனா, அஜெக்ஷன், சசிகுமார், திவ்வியா, அஸ்வினி, தீபக், மாதங்கி, பிருந்திகா, மாருதிகா, கோவிந்சிங்கம், ஸ்ரீபன், ஜெனிக்கா, தர்மிகா, பத்மஜன், கஜானன், தீவானி, லக்சியா, சாருணியா, லதுசியா, கிசோக், நிசாந், தனுக், விதுஷன், சங்கவி, டிலக்ஷன், டிலக்சனாஆகியோரின் பேர்த்தியும் சௌமிகா, சாருகா, சஸ்மிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P.: 0112360086,
00919962314896,
00919962314870. (சி/54452)

தகவல்:
சிறிகஜேந்திரா
*(சிறி- மகன்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சாவகச்சேரி லயன்ஸ் கழகமும், தென்மராட்சி கிழக்கு கொடிகாமம் லயன்ஸ் கழகமும் இணைந்து தென்மராட்சி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயின்று 2007ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 91 மாணவர்களையும் கௌரவித்துள்ளன.

இந்த நிகழ்வு தென்மராட்சி கலை மன்றத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் மாணவர்கள் அழைத்துவரப்படுவதையும் மங்கள விளக்கை லயன்ஸ் கழக வடபிராந்திய உப ஆளுநர் லயன் ராஜபக்ச ஏற்றுவதையும் - நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: அருணன்)

# தனியார் பார ஊர்திச் சங்கச் சேவைகளில் பாகுபாடு காட்டப்படுவதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ்.மாவட்டத் தனியார் பார ஊர்திச் சங்கத்தில் புதிய அங்கத்தவர், பழைய அங்கத்தவர் என்ற பாகுபாடு காட்டப்படுவதனால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகப் புதிய அங்கத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த ஜூன் மாதம் 24ஆம் திகதி நடைபெற்றது. அந்த நிர்வாகத் தெரிவிற்கு புதிய அங்கத்தவர்கள் அனுமதிக்கப்படவில்லை. அதேபோல அரச அதிபரினால் வழங்கப்பட்டுள்ள மணல் ஏற்றும் பணிக்கும் நிர்வாக சபை உறுப்பினர்களின் லொறிகளும் பழைய அங்கத்தவர்களின் லொறிகளுமே கூடுதலாக ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஏனைய லொறிகளுக்கும் மணல் ஏற்ற அனுமதி தரும்படி சங்க நிர்வாகத்திடம் பலமுறை கேட்டும் அதற்கும் பல்வேறு காரணங்கள் கூறித் தட்டிக் கழித்து வருகிறார்கள் - எனப் புதிய உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

மணல் ஏற்றாத லொறிச் சொந்தக்காரர்கள் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றுவதற்குத் தெல்லிப்பழை சோதனை நிலையத்தில் காலை 7 மணிமுதல் மாலை 5 மணிவரை காத்துக்கிடந்து அந்தச் சேவையைச் செய்கிறார்கள்.

எனவே இந்தப் பாரபட்சத்தை நீக்குவதற்கு அரச அதிபர் அல்லது அதிகாரிகள் தலையிட்டு ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். (50-86)

## யாழ்.மாநகர சபையால் தண்ணீர் விநியோகம்

நல்லூர்,நவ.23

யாழ்.மாநகர சபையால் பொம்மைவெளி பிரசவ விடுதி, கோட்டைப் பகுதியில் உள்ள மலசலகூடங்கள், கற்குளம் வீதி, பொம்மைவெளி வீதி ஆகிய இடங்களுக்குத் தண்ணீர் விநியோகம் செய்யப்படவுள்ளது.

அத்துடன் குருநகர் மேற்கு சிறுவர் பூங்காவிற்கு சுற்றுமதில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதுடன் கொழும்புத்துறை சிறுவர் பாடசாலைக்கு கல்விசார் அபிவிருத்தித் திட்டங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் மஹிந்த சிந்தனையில் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நாவாந்துறை சந்தை புனரமைப்பு வேலைக்கென 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருவதாகவும் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (203-111)

## சண்டிலிப்பாயில் சிறந்த பண்ணையாளர் கௌரவிப்பு

வலி.தென்மேற்கு,நவ.23

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தால் சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட ஒன்பது சிறந்த பண்ணையாளர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு சண்டிலிப்பாய் பதில் கால்நடை வைத்திய அதிகாரி செல்வி புஸ்பலேகா மரியதாசன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வத்சலா அமிர்தலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு தெரிவான பண்ணையாளர்களுக்கு பரிசில்களை வழங்கினார். (203-135)

## டெங்கு ஒழிப்பு சிரமதானம்

யாழ்ப்பாணம்,நவ.23

வலி.தென்மேற்குப் பிரதேச சபை சுகாதார தொழிலாளர்களும் அப்பகுதி பாடசாலை மாணவர்களும் இணைந்து டெங்கு ஒழிப்பிற்கான சிரமதான வேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

முதற்கட்டமாக ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியசாலை சூழல் பகுதி சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படுகிறது.

அடுத்த கட்டமாக பிப்பிலி, காக்கை தீவு, புலவர் முகாம்பகுதி என்பனவும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளன. (203-95)

## வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சி சபைகளுக்குச் செயலாளர்கள்

யாழ்ப்பாணம்,நவ.23

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சிச் சபைகளுக்கு உள்ளூராட்சி உதவியாளர்கள் செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொகான் விஜயவிக்கிரமவின் பணிப்பின் பேரில் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கிளிநொச்சி மாவட்டங்களில் முதற்கட்டமாக நகரசபை, பிரதேச சபைகளில் பணியாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்கள் 11 பேர் செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள 72 உள்ளூராட்சி சபைகளில் 56 உள்ளூராட்சி உதவியாளர்கள் கடந்த 8 வருடங்களாக விசேட ஆளணியினராகக் கடமையாற்றி வருகின்றனர். (அ-95)

## சாதாரண மாணவர்கள் பாடமாற்றம் இருப்பின் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்குக

யாழ்ப்பாணம்,நவ.23

டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தமது பாடங்களில் மாற்றங்கள் ஏதும் காணப்படுமிடத்து நாளை மறுதினத்திற்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சைக்கு தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட முகவரிக்கும் பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கு உரிய பாடசாலைகளுக்கும் அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன.

மாணவர்கள் விண்ணப்பித்த பாடங்களில் ஏதும் மாற்றங்கள் காணப்பட்டால் பாடசாலை அதிபர் ஊடாகக் கோட்டக் கல்வி அதிகாரி மூலம் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைத் திணைக்களத்திற்கு நேரில் வந்து உரிய மாற்றத்தை செய்யமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (203-68)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.23

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே ஆறுமுக நாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு வலய மட்ட கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

பாடசாலை மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவர்களை இப்போட்டிகளுக்கு அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (203-207)

* * *

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு குழந்தைகள் தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

தீவக முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் கே.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ப. வசந்தகுமார், காரைநகர் உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொள்வர். (203)

* * *

சுன்னாகம் சமூக கலை இலக்கிய உள நல மேம்பாட்டு மையம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி பிரதான மண்டபத்தில் ஜி.சீ.ஈ சாதாரண தர மாணவர்களுக்கு 'இலங்கையில் உள்ள ஓவியக்கலை' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது. அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ஆசிரியர் பொ. விஜயகுமார் தலைமையில் இது இடம்பெறவுள்ளது. (203)

* * *

யாழ்ப்பாணம்,நவ:23

தாவடி, கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியில் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கார்த்திகைத் தீபமும் பூரணை விழாவும் இடம்பெறவுள்ளன. (203)

## கசிப்பு வைத்திருந்த இருவருக்கு தலா ஒரு லட்சம் அபராதம்

வலி.வடக்கு,நவ.23

கசிப்பு வைத்திருந்த இருவர் நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். நீதிமன்றினால் அவர்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபா தண்டனை விதிக்கப்பட்டது.

இருவரும் தலா 45 போத்தல் கசிப்பை தம்வசம் வைத்திருந்தவேளையில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற குழுவினர் அவர்களைக் கைதுசெய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஊரெழு மேற்கைச் சேர்ந்த செல்வராசா அஜந்தன் மற்றும் ஏழாலை தெற்கைச் சேர்ந்த செல்வராசா விஷ்ணுராஜ் என்பவர்களுக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

உரிய பணத்தைச் செலுத்தத்தவறும் பட்சத்தில் ஒருவருட சிறைத்தண்டனையும் அனுபவிக்கவேண்டும் என்று மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் தமது தீர்ப்பில் தெரிவித்தார்.

அபராதப் பணத்தை செலுத்தாதைத் தொடர்ந்து இருவரும் சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (அ-86)

## முதுகலைமாணிப் பரீட்சை டிசெம்பர் 3இல் நடைபெறும்

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ்.பல்கலைக்கழக முதுகலைமாணி பரீட்சைகள் எதிர்வரும் 3ஆம் திகதி முதல் ஆரம்பமாகின்றன.

பரீட்சை அனுமதி அட்டைகளைப் பட்டப்படிப்புகள் பீடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆய்வுக் கட்டுரைகள் ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை புதிய கல்வியாண்டுக்கான முதுகலைமாணி அபிவிருத்தி, முதுகலைமாணி பிராந்திய திட்டமிடல், முதுகலைமாணி சனத்தொகை ஆகிய கற்கைநெறிகளுக்கு சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (203-95)

## நவாலியில் மழையால் 63 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.23

கடந்த மூன்று நாள்களாக பெய்த கடும் மழையினால் நவாலி வடக்கு - நாச்சிமார் வீதியில் உள்ள 63 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

சிறு கொட்டில்கள், சிறு வீடுகளில் உள்ள மக்களே வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடும் மழை மற்றும் குளிரினால் இப்பகுதிச் சிறுவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (203-95)


டெங்குக் காய்ச்சல்

டெங்குக் காய்ச்சல் மூன்று நிலைகளாக ஏற்படலாம்.
1. சாதாரண டெங்குக் காய்ச்சல்
2. டெங்கு குருதிக் கசிவுக் காய்ச்சல்
3. டெங்கு அதிர்ச்சி நிலை

டெங்குக் காய்ச்சலின் போது கடுமையான காய்ச்சலுடன் மூட்டுக்கள், தசைகளில் கடுமையான நோவு ஏற்படுவதால் இதனை எலும்பை முறிக்கும் காய்ச்சல் எனவும் அழைப்பர். டெங்குக் காய்ச்சல் முதலில் 1780இல் இனங்காணப்பட்டது, டெங்கு நோய்க்குக் காரணமான வைரஸ் 1944ஆம் ஆண்டு சபின் (Sabin) என்ற விஞ்ஞானியால் கண்டுபிடிக்கப்பட்டது.

உலக சனத்தொகையில் 40 வீதமானவர்கள் டெங்கு காய்ச்சலுக்கான அபாயத்துக்குட்பட்டவர்களாக உள்ளனர்.

சுகாதாரத் திணைக்களம்

care

Disasters Emergency Committee

(சி/54392)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று (23.11.2007) வெள்ளிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் நடைபெறும் இலங்கை உயர் தொழில் நுட்பவியல் நிறுவன 4.ஆவது பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறும் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்க அங்கத்துவ மாணவர்களையும் பட்டம் பெறும் ஏனைய மாணவர்களையும் மென்மேலும் பல பட்டங்கள் பெற்று உயர வாழ்த்துகின்றோம்.

## Higher National Diploma in Accountancy



ச.பிரதீபன் | பே.சசிதரன் | த.அகிலன் | கி.சிவனேசன் | க.சபேஷன் | M.G.கெனடி | வி.அருந்தவகுமார் | பா.நடராஜவோத்மன்



ரா.சசிக்குமார் | நா.ஸ்ரீசங்கர் | சி.கஜமாமுகன் | சி.திருவனந்தன் | க.அனுராகரன் | த.மயூரன் | டே.வி.யோசப் | வி.பிரகலாதன்



அ.ஜஸ்ரின் உதயகுமார் | பா.பிரகாஸ் | இ.சிவகுமார் | பா.விஜிதா | சா.சத்தியவாணி | ப.கிருஷாந்தி | பி.பிரவின்னா | த.தர்சினி



அ.நாகறஞ்சனா | சோ.அபிமினி | ச.ஜனிதா | சு.தவச்செல்வி | எ.சிவாஜினி | நி.அகிலா | த.சுபத்திரா | து.பிறேமிலா



தி.சூரியவதனா | இ.நிஜிலா | ரா.ரவீனா | தி.கவிதா | பொ.தாரணி | து.சுகுணாவதி | செ.மதனி | க.திலகேஸ்வரி



வி.வனிதா | தே.தயாளினி | சி.சுபர்ணா

வி.ஜெகதீசன் | கி.வதனி | இ.விஜிதா | இ.சுகந்தரூபி | ச.சிவரஞ்சினி | த.சுதாநிதி

## Higher National Diploma in Management



தே.றொபேஷன் | ம.பிரணவரூபன் | செ.பார்த்தீபன் | அ.செந்தூரன் | இ.றொபின் ஜெயரூபன் | க.கொட்பிறிகுகத் | சி.சிவதாசன் | தி.கஜேந்திரன்



க.ரகுநாதன் | பி.வசீகரன் | இ.சோபினி | ச.சாந்தகுமாரி | K.அபிராமி | Y.மைதிலின் | வி.அ.அனுபா | யோ.மேரிதிபிகா

பா.தாரணி | சி.சிவாஜினி | ம.மேகலா

## National Diploma in Business Studies



கு.சந்திரமோகன் | நா.ராஜினி | யோ.சுபாஜினி | தி.நீரஜா | ச.மயூரப்பிரியா | இ.கௌரீஸ்வரி | சி.கிருபானந்தி | செ.பாதுஷா

தி.திருவருட்செல்வி

**பழைய மாணவர் சங்கம்**
**யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், யாழ்ப்பாணம்.**

(68161)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களைக் கொன்றொழித்த பெருமைக்கு விருது பெறவா ஜனாதிபதி உகண்டா பயணம்?

## நாடாளுமன்றில் சிவாஜிலிங்கம் எம்.பி. கேள்வி

கொழும்பு,நவ.23

"வடக்கு,கிழக்கில் தமிழ் மக்களைக் கொன்று குவித்த பெருமைக்கான விருதை வாங்குவதற்காகவா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உகண்டா செல்கின்றார்?" - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம் இவ்வாறு சபையில் நேற்று முன்தினம் கேள்வி எழுப்பினார்.

வரவு - செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சிவாஜிலிங்கம் இப்படிக் கேட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 18 மாதங்களாக ஏ - 9 வீதி மூடப்பட்டுள்ளது. அங்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் யானை விலை, குதிரை விலைக்கு விற்கப்படுகின்றன.

இதனால் எமது மக்கள் பசி, பட்டினியால் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

மறுபக்கம் அரச படைகள் கிபீர் விமானங் கள் மூலம் - நேர காலம் இன்றி - இரவு பகலாக - தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்கள் மீது குண்டு மழை பொழிகின்றன. தினசரி அப்பாவி தமிழ் மக்கள் அரச படையினரால் வேட்டையாடப்படுகின்றனர்.

இதனைத் தடுக்க வக்கில்லாத அமைச்சர் டக்ளஸ் தேவானந்த இங்கே ஜனாதிபதி யின் கால்களைப் பிடித்துக் கொண்டிருக்கின்றனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழி ஏற்படுத்துவோம் என்று கூறிக்கொண்டு ஜனாதிபதி சர்வகட்சி மாநாட்டை கூட்டனார். அது ஒரு பம்மாத்து. அதனால் நடக்கப்போவது ஒன்றும் இல்லை.

வெளி நாடுகளுக்கு செல்லும் ஜனாதிபதி,இதோ தீர்வு கண்டு விட்டோம். அதோ தீர்வு காணப்போகிறோம் என்று வெளி உலகை ஏமாற்றிக் கயிறு விட்டுக் கொண் டிருக்கின்றார்.

### வடக்குக்- கிழக்கைப் பிரித்ததை தட்டிக் கேட்க முடியாதவர்

இலங்கை - இந்திய உடன்படிக்கையின் மூலம் 1987ஆம் ஆண்டு ஒன்றிணைக்கப்பட்ட வடக்கையும் கிழக்கையும் திட்டம் போட்டு பிரித்து விட்டனர்.

இதனைத் தடுக்கவும் தட்டிக் கேட்கவும் லாயக்கில்லாத டக்ளஸ் அதே அமைச்சர வையில் இருப்பது வெட்கம்கெட்டத்தன மாகும்.

கிழக்கு மாகாணத்தைப் பிடித்து விட்டோம், அங்கே மீள்குடியேற்றங்களை மேற்கொண்டு வருகின்றோம் என்று பீற்றித் திரிகின்றனர்.எங்கே உங்களுடைய வரவு - செலவுத் திட்டத்தில் அதற்கு போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்று பாருங்கள்.

### கூடாரங்களில் அடைத்து வைக்கப்படும் தமிழ் மக்கள்

அரச படைகள் பல லட்சம் மக்களைத் துப்பாக்கி முனையில் ஓட ஓட விரட்டியிருக்கின்றன. ஆனால் அந்த மக்களை மீளக் குடியமர்த்த எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. மட்டக்களப்பில் அகதிகளாக இருந்தவர்களை அழைத்துக் கொண்டுபோய் கூடாரங்களில் அடைத்து வைத்துள்ளனர்.

அவர்களுக்கு குடிதண்ணீர் இல்லை. மலசலகூட வசதி இல்லை. சுகாதார வசதிகள் இல்லை. ஒட்டு மொத்தமாக அடிப்படை வசதி எதுவுமே இல்லை.

திருகோணமலை மாவட்டத்தில் 23 கிராமசேவையாளர் பிரிவு களில் இருந்து வெளியேற்றப்பட்ட மீனவர்களும், விவசாயிகளும் இன்றும் அகதி முகாம்களில் அடைபட்டுக் கிடக்கின்றனர். சொந்த வீடுகளுக்கும், காணிகளுக்கும் அவர்கள் செல்ல இராணுவம் தடைவிதித்துள்ளது. கண்ணிவெடி அகற்றப்படவில்லையென்று காரணம் கூறுகின்றனர்.



ஆனால், மீள்குடியேற்றம் என்ற பெயரில் கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களைத் திட்டமிட்டு குடி யேற்றுகின்றனர்.

ஆனால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாதாந்தம் பாதுகாப்பு அமைச்சரிடம் இருந்து 80 லட்சம் ரூபாவை வாங்கிக் கொண்டு அரசுக்கு வக்காலத்து வாங்குகின்றார். தமிழ் மக்களின் சாபத்திற்கு டக்ளஸ் பதில் சொல்லியே ஆக வேண்டும் - என சிவாஜிலிங்கம் கூறினார். (சி)

# தேர்தல் மறுசீரமைப்பு மும்முரம் அமைச்சர் தினேஷ் கூறுகிறார்

கொழும்பு, நவ.23

இலங்கையின் தேர்தல் முறைமையை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்றும் தற்போதைய தேர்தல் முறை உடனடியாக மாற்றியமைக்கப் படாவிட்டால் நாடு எதிர்காலத்தில் பாரிய சிக்கலை எதிர்நோக்கும் என்றும் அமைச்சர் தினேஷ்குணவர்தன நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

பயங்ககரவாதத்தைத் தோற்கடிப்பதுதான் எமது முதல் கடமை. அப்படியாயின் இந்த வரவு-செலவு திட்டத்திற்கு நாம் முழு ஆதரவை வழங்க வேண்டும்.

பயங்கரவாதத்தை ஒழிக்க வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் தான் அதி கூடுதலான நிதி பாதுகாப்புச் செலவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று சம்பந்தன் இங்கு சொன்னார்.

அது பொய்யான தகவல் உலகிலேயே இலங்கையில் தான் பாதுகாப்புச் செலவுக் காக மிகக் குறைவான அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது- என்று அவர் மேலும் தெரிவித்தார். (சி)

# இந்து சமயத்துக்குத் தனி அமைச்சு இல்லாமை வேதனைக்குரிய விடயம்

## சபையில் மகேஸ்வரன் ஆதங்கம்

கொழும்பு, நவ.23

அன்று எதிர்க்கட்சித் தலைவராகவும் இன்று ஜனாதிபதியாகவும் இருக்கும் மஹிந் த ராஜபக்ஷவை பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் நான் யாழ்ப்பாணத் துக்கு அழைத்துச் சென்றேன். அங்கே எமது தமிழ் மக்கள் நட்புறவுடன் அவருக்குப் பெரும் வரவேற்பளித்தனர்.

தமிழர்களின் நற்பண்புகளையும் பண்பாடுகளையும் நேரடியாக கண்டுகொண்ட ஜனாதிபதி அங்கே தமிழில் உரையாற் றினார்.

இவ்வளவு விடயங்களும் நன்கு அறிந்த ராஜபக்ஷ இன்று சக்ல அதிகாரங்களையும், கொண்ட ஜனாதிபதியாக இருக்கிறார். ஆனால், இந்து சமய விவகாரங்களுக்கு தனியான ஓர் அமைச்சை அவர் வழங்காதமை மிகவும் வேதனைக்குரியது - என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் கவலை தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

முன்னைய அரசின்போது இந்து சமயத்திற்கு எனத் தனியான அமைச்சுடன் இந்து சமயம் பேணிப் பாதுகாக்கப்பட்டது.

கடந்த காலத்தில் முதன்முறையாக செ.இராஜதுரை தலைமையிலும் இரண்டாவதாக எனது தலைமையில் உலக இந்து சமய மாநாடு இலங்கையில் நடத்தப்பட்டது. வடக்கு கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கை களினால் பாதிக்கப்பட்டிருக்கும் கோயில்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. கோயில்களை மீண்டும் கட்டி எழுப்ப நிதி ஒதுக்கப்படவில்லை. இப்புனித ஆலயங்களின் வரலாறும் முக்கியத்துவமும் தெரியாதவர்களே இன்று சமய கலாசார அமைச்சராக இருக்கின்றார்.

இதே போன்று மலையகத்திலும் பழைமை வாய்ந்த கோயில்கள் புனரமைக்கப்பட வேண்டும்.மலையகத்தில் அறநெறிப் பாடசாலைகள் அதிகரிக்கப்பட வேண்டும் - இப்படி மகேஸ்வரன்எம்.பி.கோரினார். (சி)

# தன்னலமற்ற உன்னத சேவையை உலகுக்கு உபதேசிக்கும் பகவான்



**இன்று சத்திய சாயி பாபா அவதரித்த தினமாகும். அதை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

*1926 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதியன்று இந்தியாவில் ஆந்திர மாநிலத்திலுள்ள புட்டர்பத்தி என்ற கிராமத்தில் பகவான் சாயி பாபா அவதாரம் எடுத்தார். தாயார் ஈஸ்வரம்மா, தகப்பனார் பெட்ட வெங்கப்ப ராஜூ ஆவார். இவருக்குத் தாய், தந்தையர் இட்ட பெயர் சத்திய நாராயணன் இக் குடும்பம் வறுமையிலிருந்தாலும் கடவுள் பக்தியில் சிறந்து விளங்கியது. புட்டபர்த்தி கிராமம் அன்று மிகவும் பின்தங்கியதாக இருந்தது. இன்று அது உலகத்தின் ஆன்மீகத் தலைநகராக சிறப்படைந்துள்ளது. இவரை உள்ளுணர்வால் உணர்ந்த சில ஆசிரியர்களும், மாணவர் களும், பெரியார்களும் பாட்டனாருமே இவர் ஓர் ஆன்மீக மகான் என்றும் பிரம்மஞானி என்றும் அழைத்தார்கள். பெற்றோரும், சுற்றத்தாரும் இவருக்கு ஏதோ பைத்தியம் பிடித்துவிட்டதென்றெண்ணி இவர் செய்யும் காரியங்கள் குறித்து மிகவும் சஞ்சலமடைந்தார்கள்.*

### சாயிபாபா என பிரகடனம் செய்தார்

**இன்று அவதார தினமாகும்**

*23.05.1940 அன்று தனது 14ஆவது வயதில்தான் சாயிபாபா என்று பிரகடனம் செய்தார். அத்துடன் தன்னை வியாழக்கிழமைகளில் வணங்க வேண்டுமென்றும் சொன்னார். எத்தனையோ அற்புதங்களை புரிந்தும் பரந்த ஆழ்ந்த அறிவை வெளிப்படுத்தியிருந்தாலும், பெற்றோருக்கு இவரை அப்பொழுது அவதாரமென ஏற்றுக்கொள்ளக் கஷ்டமாயிருந்தது. பிற்காலத்தில் எல்லோரும் அவரின் பக்தர்க ளாக மாறினார்கள்.*

*1940 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதியன்று தீடீரெனத் தனது பாடப் புத்தகங்களைக் கீழே போட்டு விட்டு தனது பக்தர்கள் தன்னை அழைக்கிறார்கள் என்று சொல்லி வீட்டைவிட்டு வெளியேறினார்.*

*அன்றிலிருந்து தனது தெய்வீகத்தன்மையை வெளிக்காட்டி மனித குலத்தை உய்வித்துக் கொண்டிருக்கிறார்.*

*இவர் படிப்படியாக பக்தி, சேவை, மனிதமேம்பாட்டுக்கல்வி, கிராமிய எழுச்சி, என்ற மார்க்கங்களை வலியுறுத்துவதுடன் வழிகாட்டிக்கொண்டிருக்கிறார்.*

### மனிதமேம்பாட்டுக் கல்விச்சேவை

*இவரின் சேவை அளப்பரியது. மனித குலத்தை மேம்படுத்துவதற்காக மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டத்தை பாலவிகாஸ், சத்தியசாயி பாடசாலைகள்,கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், சர்வதேசமனித மே ம்பாட்டுக் கல்வி நிறு வனங்கள் மூலம் அமுல்படுத்துகிறார்.*

*மனித மேம்பாடுகள் இணைந்த கல்வி மூலமே மனித குலத்தைப் பரந்த அளவில் தீவிரமாகக் குறுகிய காலத்தில் மேன்மைப்படுத்துவதற்க ாகவே சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல் வித்திட்டத்தை அறிமுகம் செய்தார். இக்கல்வித் திட்டம் இந்தியாவிலும் பல வெளி நாடுகளிலு ம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இக் கல்வித் திட்டத்தின் தத்துவம் உள்ளுறையும் தெய்வீகத்தை வெளிக்கொணர்வதேயாகும். இத் திட்டத்தின் மைய நோக்கு மனித உன்னதமாகும். இத் திட்டம் ஆசிரியரையே மையமாகக் கொண்டுள்ளது.*

*மனித குலத்தை உய்விக்க பல பாரிய சேவைத் திட்டங்களை செய்து காட்டியுள்ளார். இதில் குடி தண்ணீர் விநியோகம், வைத்திய சேவை, கிராமிய சேவை, வறுமை ஒழிப்புச் செயற்பாடுகள், வலிமையற்றோருக்கு புனர்வாழ்வு என்பன அடங்கும். கல்வி, குடிதண்ணீர், வைத்திய சேவைகள் இலவசமாக மக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்பதையே வலியுறுத்துகின்றார்.*

*இவரின் வாழ்வே இவரின் செய்தி. தன்னலமற்ற தொடர்ச்சியாகச் சேவையிலீடுபடுவதுடன் அன்பையும் சொரிந்து கொண்டிருக்கிறார். மதமாற்றமல்ல, உன்னத மனமாற்றமே தனது நோக்கு என்றும், எல்லாவற்றிலும் தெய்வீகத்தைக் காண்பதே உயர்ந்த ஆன்மீக நிலையென்பதையும், சனாதன தர்மத்தைக் கடைப்பிடிப்பதையும், ஐந்து அடிப்படை மேம்பாடுகளான அன்பு, சத்தியம், தர்மம், சாந்தி, அகிம்சையை எண்ணம், சொல், செயலில் பரிணமிக்க வேண்டுமென்பதையுமே போதிக்கின்றார். சகல மதங்களும் உன்னதமானவையே என்பதில் நிலை நிற்கச் சொல்கிறார்.*

*இவரின் மகிமை தற்போது உலகெங்கும் பரவியுள்ளது. புட்டபர்த்தியில் உலகெங்கிலுமிருந்து பக்தர்கள் கூட்டம் திரளுவதைக் காணலாம். இதற்கெல்லாம் தூய தெய்வீக அன்பின் கவர்ச்சியே காரணமாகும்.*

*ஆன்மீக முன்னேற்றத்திற்கு அறியாமை மாத்திரமல்ல, குறைவான அறிவுமே தடையாயுள்ளன. மனித உருவில் நடமாடும் ஒருவரைக் கடவுளென்று ஏற்க நமது குறைப் புத்தி மறுத்துவிடும். பகவானே சொல்லியுள்ளார். ''நான் மனித உருவில் உங்கள் மத்தியில் நடமாடுவதால் எனது தெய்வீகத்தை அறியமாட்டீர்கள். எனது தெய்வீகத்தின் மகிமையைப் பல பிறவிகள் எடுத்து ஆராய்ச்சி செய்தாலும் முழுமையாக அறிய முடியாது. நம்பிக்கை, அன்பு மானிட சேவை மூலமே என்னை அனுபவரீதியாக விளங்க முடியும். மனித உடலில் வந்து பலரைக் கவருவதனால் என்னில் பொறாமை கொண்ட சிலர் ஊடகங்களில் அவதூறாக விமர்சிக்கிறார்கள். நான் அவர்களையும் ஆசீர்வதிக்கின்றேன்.''*

*இந் நன்னாளில் பகவானின் ஆசியும் அருளும் சகலருக்கும் கிடைக்கவேண்டுமென்பதே எமது பிரார்த்தனை.*

**வைத்திய கலாநிதி. இ. கணேசமூர்த்தி**
*சத்திய சாயி சேவா நிலையம், யாழ்ப்பாணம்.*

# வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுமானால் புலிகள் இழந்தஇடங்களை மீளக் கைப்பற்றுவர்

## மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறது ஜாதிக ஹெல உறுமய

கொழும்பு,நவ.23

வரவு- செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் அது புலிகள் தாங்கள் இழந்த இடங்களைக் கைப்பற்றவும், தம்மை மீண்டும் பலப்படுத்தவும் வசதியாக அமைந்துவிடும். ஆகவே ஒருபோதும் வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிக்கத் துணைபோகப்போவதில்லை. - என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

டிசம்பர் முதலாம் திகதி இடம்பெறப்போகும் வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது, கடந்த 19ஆம் திகதி இரண்டாம் வாசிப்பின்போது கிடைத்த வாக்குகளை விடவும் அதிக வாக்குகள் கிடைக்கும் என்றும் அக்கட்சி நம்பிக்கை தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் ஜாதிக ஹெல உறுமய நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் தலைவர் வண எல்லாவல மேதானந்த தேரர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு-

இந்த வரவு செலவுத் திட்டத்தில் பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துக்கட்டவும், பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் உரிய திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான வரவு செலவுத் திட்டத்தை நாட்டின் நலன்கருதி ஆதரிப்பது எமது கடமை. சிலர் இதை தோற்கடிக்க முற்படுகின்றனர். இந்த வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிப்பதற்கான தேவை பிரபாகரனுக்குத் தான் உள்ளது. அந்தத் தேவையை நிறைவேற்றவே பிரதான எதிர்க்கட்சி பாடுபடுகின்றது.

வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் நாட்டில் மீண்டும் தேர்தல் ஒன்றுவரும். தேர்தல் நடத்தக்கூடிய சூழல் தற்போது நாட்டில் இல்லை.

அதேபோல் புலிகளும் அதனால் எல்லாவகையிலும் பலம் பெறுவர். அவர்கள் இழந்த இடங்களை மீண்டும் கைப்பற்றும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கும் என்றார். (சி)

# தீயனவற்றில் இருந்து விடுதலை பெறுவதற்கு அருள் நூல்களை சிறுவயதில் இருந்தே கற்குக

திருவருட் பயனைத் தந்த உமாபதி சிவாச்சாரியார் ''பாற் கலன் மேற் பூஜை'' என்ற சொற் தொடரைத் தந்துள்ளார். நாவலர் பெருமானும் நமது மனிதப் பிறவியின் நோக்கம் இறைவனை வழிபட்டு முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும் என்றார்.

பூனை பாற் குடத்தில் உள்ள பாலைப் பருகாது, பாற்குடத்துக்கு உறியிலே ஊர்ந்து செல்லும் கரப்பான் பூச்சியைக் காண்கின்றது. பூனை இச் சிறு பிராணியை உண்ணுதற் பொருட்டாக பாற்குடத்திலே பாய்கிறது. பாற்குடம் உடைந்து பால் பூனைக்குப் பயன்படாதிருக்கப் போகின்றது இது பூனையின் அறியாமையால் ஏற்படுகின்றது.

எனவே நாங்களும் இவ்வாறு மாறுபடாது தேவாரம், திருவாசகம் போன்ற திருமுறைகளையும், ஞான நூல்களான வேத சிவாகமங்களின் சாரமாகிய மெய்கண்ட சாஸ்திரங்கள் பன்னிரண்டையும் கற்று ஒழுகப் பழகுதல் வேண்டும்.

ஞானக்கதிர்

வேதமும் சிவாகமமும் சிவபெருமானால் அருளப்பட்டமயால் இவை சைவசமயத்தின் பிரமண நூல்கள். சிவபெருமான் திருவருள் பதிந்த தேவாரம், திருவாசகம் முதலியன மெய்ஞானிகளின் வாக்குகளாகும். எனவே இந்த அருள் நூல்களை சிறுவயதிலேயே கேட்டும் கற்றும் வாழப்பழகிக் கொள்ள வேண்டும்.

மாணிக்கவாசக சுவாமிகளின் தந்த தேன் ஒழுகும் திருவாசகப் பாடல் ஒன்றைப் பார்ப்போம்.

வாழ் கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
டாழ் கின்றாய் யாழாமற் காப்பானை யேத்தாதே
சூழ் கின்றாய் கேடுகைக்குச் சொல்கின்றேன் பல் காலும்
வீழ் கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே.

எனவே நாம் தீயவற்றில் இருந்து விடுதலை பெற்று நல்லன கற்று இறைவனின் திருவருளை பெற்றுப் உய்தி பெறுவோமாக.

**- சிவகாசி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

**சிவலை வல்லிபுரம்**

தோற்றம்
25*03*1932

மறைவு
03*12*2006

*எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எமையெல்லாம்
பாரினில் உயர்வு பெற்று வாழ வழிவகுத்து வைத்த
பாசமிகு எங்கள் ஐயா இறைவனுடன் கலந்து
ஓராண்டு ஆகின்றபோதும் அவரது நினைவுகள்
என்றும் எம் இதயங்களில் அழியாது வாழ்கின்றன.*

அவரது ஓராண்டு நினைவு தினமான இன்று (23.11.2007) வெள்ளிக்கிழமை அவரது ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது இல்லத்தில் இடம்பெறும் ஆண்டுத் திவசக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரது ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கரும்பியோடை,
சமரபாகு, வல்வெட்டித்துறை. (68087)

**குடும்பத்தினர்.**

## ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவஞ்சலி

திருமதி

**கதிரமலை செலஸ்ரினா**



மலர்வு
20*08*1963

உதிர்வு
23*11*2005

**வாழும் காலத்தில் எங்களோடு வாழ்ந்தாயே!
வாழ வழிகாட்டிய கலங்கரை விளக்கே! விடிவிளக்கே!
எதிர்பாராத வேளையிலே நீ எம்மை
விட்டுப் பிரிக்கப்பட்டாய்
நீர் எம்மை விட்டுப் பிரிந்து சென்று
ஆண்டுகள் இரண்டு ஆனாலும் உன்
நினைவுகள் எமைத் தினம் வாட்டுகின்றதே.**

உன் ஆத்மா ஆண்டவரின் இருபாதத்தில் இளைப்பாற திருக்குடும்ப மாதாவை வேண்டுகின்றோம்.

மல்வம்,
உடுவில். (68058)

உன் பிரிவால் துயருறும்:
**கணவர், பிள்ளைகள், உறவுகள்.**

## எள்ளின் விலை உயர்வு

நவாலி,நவ.23

குடாநாட்டில் எள்ளின் விலை திடீரென அதிகரித்துள்ளதால் நல்லெண்ணெய்யின் விலையும் உயர்ந்துள்ளது.

இதுவரையும் 170 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த எள்ளுக்கு 200 ரூபா கட்டுப்பாட்டு விலை விதித்ததினால் வெளிக் கடைகளில் 230 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

இதனால் 330 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு போத்தல் நல்லெண்ணெய் தற்போது 350 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. (203-100)


### டுபாயில் வெற்றிடங்கள்
### யூ. ஏ. ஈ.- எம். பீ. எம். கம்பனி

(உடனடிப் பயணம்)

| இல | தொழில் | தேவையானோர் | சம்பளம் |
|---|---|---|---|
| 01 | ஆண் சுத்திகரிப்பாளர் | 350 | டினார் 450/- |
| 02 | பெண் சுத்திகரிப்பாளர் | 400 | டினார் 500/- |

**விதிகளும் நிபந்தனைகளும்**

இரண்டு வருட ஒப்பந்தம், வேலை நேரங்கள், நாளொன்றுக்கு எட்ட(8) மணித்தியாலங்கள், வாரமென்றுக்கு 6 நாட்கள், இலவச தங்குமிடம், இலவச மருத்துவம், மற்றும் இலவச உணவு வழங்கப்படும். ஒப்பந்த காலவரை முடிவடைந்தன் பின்னர் தகுதிகாண் காலவரை 90 நாட்கள்.

வயதெல்லை 18-45 அனுபவமுள்ளவர்கள் / பயிலுனர்கள் தமது கடவுச்சீட்டுடன் கீழ்க்காணப்படும் முகவரிக்கு வரவும்.
3 வாரங்களுக்குள் பயணம்.
நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது
மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 7.00 மணிவரை
(ஞாயிற்றுக்கிழமையும்) திறந்திருக்கும்.

*உப முகவர்களும் விண்ணப்பிக்கலாம்

அராபியன் றோல் குறூப் (பிறைவேட்) லிமிடெட்
375, முதலாம் மாடி, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை
(டுப்பிளிக்கேஷன் றோட்) கொழும்பு - 03.
தொலைபேசி :-2370653, 2502719
(டேர்டன் வைத்தியசாலைச் சந்தி அருகில் மஹாநாம வித்தியாலயத்துக்குப் பக்கத்தில்)


அனுமதி இல. ஏஎல்/960/விளம்பரம்/03,05/07

மேலும் தகவல்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள உப முகவரைத் தொடர்புகொள்ளவும்.

துவரகா இலத்திரனியல் - 22 கே.கே.எஸ். வீதி சுன்னாகம்.
தொலைபேசி : 011 2514003


## ஓராண்டு நினைவலைகள்

மலர்வு
02 * 06 * 1923



உதிர்வு
03 * 12 * 2006

அமரர் **பூதப்பிள்ளை காசிலிங்கம்**

பலாலி தெற்கு, வயாவிளான் (ஓய்வுபெற்ற இ.போ.ச. சாரதி)

23.11.2007

**அன்புடனும் பாசத்துடனும்
எங்களை வளர்த்த அப்பா!
ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
இவ்வுலகில் இன்னமும் வாழ்வீர்
என்று நம்பிய எங்களுக்கு
கண்ணீர்தான் மிஞ்சியது அப்பா!**

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.


(67980)

தற்போதைய முகவரி:
"சுவேந்தினி பவனம்",
பாடசாலை வீதி,கோண்டாவில் மேற்கு.

**குடும்பத்தினர்.**

## ஈராண்டு நினைவுச் சங்கமம்

மண்மகிழ
08 * 06 * 1931



கண்நெகிழ
14 * 12 * 2005

அமரர் **செல்லையா தம்பித்துரை**

(ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார், கொழும்பு துறைமுக அதிகாரசபை அத்தியட்சகர், மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாக சபை உப தலைவர்)

திதி:சதுர்த்தசி

**உன்னத வாழ்வு கண்டீர்
உத்தம குணங்கள் கொண்டீர்!
எண்ணுதற் கருமையான - இனிய
நற்செயல்கள் செய்தீர்
மண்ணிலே வாழும்வரை
மறந்திடோம் உங்களை நாம்
மாறிலா உங்கள் அன்பை
மறந்திடார் மாந்தர் யாரும்!**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(62118)

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
05.10.1947

மறைவு
03.12.2006



# அமரர் மார்க்கண்டு அரியரட்ணம்

**ஓராண்டு சென்றதுவோ எம்மை விட்டு நீங்கள் சென்று
பாராட்டிப் பலர் புகழ வாழ்ந்தவேளை
வாராயோ என்றழைத்தான் காலனவன்
தீராது உம் பிரிவு தாளாது தவிக்கின்றோம்
வாராயோ நீங்கள் இங்கு வழி நடத்த எம்மை
ஆறுதல் நீங்கள் பெற அரன் அருள் வேண்டுகின்றோம்.**

*அன்னாரின் நினைவாக நாளை (24.11.2007) சனிக்கிழமை சிறீ முதலி அம்மன் கோயில், புலோலி தெற்கு, புலோலி, பருத்தித்துறையில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.*


* இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

399, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (68143)

**மனைவி, பிள்ளைகள்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
30 * 08 * 1928



உதிர்வு
03 * 12 * 2006

அமரர் **கந்தையா பஞ்சலிங்கம்**

(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்)

*திதி: சதுர்த்தசி (23.11.2007)*

**அன்புள்ள கணவராய்
பாசமுள்ள தந்தையாய்
பண்புள்ள மாமனாய்
கருணையுள்ள பேரனாய்
கம்பீரமாக எமைக்காத்த தெய்வமே!
ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் ஆத்மா என்றும் எங்களுடன்...**

"லிங்க மகால்",
தாவடி வடக்கு,
கொக்குவில். (68134)

இதய நெருடலுடன்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிய நடவடிக்கைக்குக் கோருகிறது இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம்

கொழும்பு நவ. 23

'சண்டே லீடர்', 'மோர்னிங் லீடர்' மற்றும் 'இரு தின' ஆகிய பத்திரிகைகளை வெளியிடும் லீடர் வெளியீட்டு நிறுவனம் மீது நேற்றுமுன்தினம் அதிகாலை மேற்கொள்ளப்பட்ட நாசகார நடவடிக்கையை இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் வன்மையாகக் கண் டிக்கின்றது.

இது விடயம் குறித்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின் அடிப்படையில் 'த மோர்னிங் லீடர்' பத்திரிகை அச்சுப் பதிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஆயுதம் தாங்கிய குழுவொன்று அப் பத்திரிகை நிறுவனத்திற்குள் நுழைந்து இந்த நாசகாரச் செயலை மேற்கொண்டிருப்பதோடு அதன் உடைமைகளுக்கும் தீ வைத்து நாசம் செய்திருக்கின்றது.

இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம் இதனை ஒரு கோழைத்தனமான செயலாக கருதுவதோடு, தலைநகரத்திற்கு அண்மையில் அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் எவ்வாறு, எவர் கண்ணிலும்படாமல் இத்தகைய செயல் மேற்கொள்ளப்பட்டது என்ற கேள்வியையும் எழுப்புகின்றது.

இவ்விடயத்தில் அரசு தலையிட்டு பாதுகாப்பை உறுதிப்படுத்தி, சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் இது போல் மோசமான நிலை மைகள் மேலோங்கலாம் என நாம் கருதுகின்றோம்.

இச்செயலானது பத்திரிகைச் சுதந்திரம் மீது மேற்கொள்ளப்பட்ட மிக மோசமான தாக்குதலாக அமைகின்றது. அரசமைப்பில் உறுதி செய்யப்பட்ட - இந்நாட்டு மக்களுக்கு இருக்கவேண்டிய - சுதந்திரமாக கருத்துகளை வெளியிடும் உரிமைக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவே இதனைக் கருத முடியும்.

எனவே, இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்தோடு, இதுபோன்ற செயல்கள் எதிர்காலத்தில் நடைபெறா என்பதையும் பத்திரிகையாளர்கள் மீது நடைபெறும் தாக்குதல்களும் இடம்பெறா என்பதையும் அரசு உறுதிப்படுத்தவேண்டும் என்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் வேண் டுகோள் விடுக்கின்றது - என்று உள்ளது.

(சி)

# அரசியல் கட்சித் தலைவர்களுக்கு தமிழகத்தில் விசேட பாதுகாப்பு!

## பரூக்கி அறிக்கையையடுத்து முதல்வர் கருணாநிதி உத்தரவு

சென்னை,நவ.23

தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமி இனந்தெரியாத நபர்களால் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணையை நடத்தி வந்த ஐ.ஏ.எஸ்.அதிகாரி பரூக்கி என்பவரின் அறிக்கையை ஏற்றுக்கொண்ட முதல்வர் கருணாநிதி, அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் தலைவர்களுக்கு உடன் பொலிஸ் பாதுகாப்பை வழங்குமாறு உத்தரவை சம்பந்தப்பட்டவர்களுக்குப் பிறப்பித்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை குறித்த உத்தரவைப் பிறப்பித்தார் எனத் தெரிவித்து தமிழக அரசு உத்தியோகபூர்வ அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கின்றது. அதில்

மாநில அளவில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கலாம். அச்சுறுத்தல் பற்றி மதிப்பீடுகளுக்கு அப்பாற்பட்டு இப்பாதுகாப்பினை வழங்கலாம் - என்று கூறப்பட்டுள்ளது.



இந்தப் பரிந்துரைகள் குறித்து தலைமைச் செயலர், வளர்ச்சி ஆணையர், உள்துறைச் செயலர், நிதித்து றைச் செயலர் ஆகியோருடன் முதல்வர் கருணாநிதி விவாதித்தார். இதைத் தொடர்ந்து பரிந்துரைகளை ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுக்க அவர் உத்தரவிட்டுள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு பராமரிப்பை மேலும் செம்மைப்படுத்த, முதுகுளத்தூரில் உள்ள 4ஆம் வகை காவல் நிலையத்தை 2ஆம் வகை காவல் நிலையமாகவும் கீழத்தூவலில் உள்ள 5ஆம் வகைக் காவல் நிலையத்தை 2ஆம் வகை காவல் நிலையமாகவும் தரமுயர்த்த முதல்வர் உத்தரவிட்டுள்ளார் என தமிழக அரசின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)

# அனுராவின் பாதுகாப்பு பிரிவை சேர்ந்தவர் கொழும்பு பேர வாவியில் சடலமாக மீட்பு

கொழும்பு நவ. 23

கொழும்பு - கொம்பனித் தெரு, நவம் மாவத்தையில் அமைந்துள்ள பேரவாவியிருந்து நேற்றுமுன்தினம் காலை ஆண் ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் மீட்டிருக்கின்றனர். மீட்கப்பட்ட இந்தச் சடலம் அமைச்சரவை பாதுகாப்புப்பிரிவைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜண்ட் ஒருவருடையது என அடையாளங்காணப்பட்டுள்ளது. இவர் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்காவின் பாதுகாப்புப் பிரிவில் தற்போது பணியாற்றி வந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது சடலத்தை நேற்றுமுன்தினம் அவரது மனைவி பொலிஸாருக்கு அடையாளங் காட்டினார். இவர் கொலைசெய்யப்பட்டாரா அல்லது தற்கொலை செய்து கொண்டாரா என்பது குறித்துப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த மரணம் தொடர்பான விசாரணைகள் நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)

# கைதி தப்பிச்செல்லும் முயற்சிக்கு உதவினாராம் புதுக்கோட்டையில் ஈழத்தமிழர் ஒருவர் கைது

சென்னை,நவ.23

தமிழகத்தின் புதுக்கோட்டைச் சிறைச்சாலையில் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழ் இளைஞர் ஒருவரை தப்பிக்க வைப்பதற்கு முயன்றார் என்ற குற்றச்சாட்டில் மற்றுமொரு ஈழத்தமிழ் இளைஞர் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சந்திரகுமார் (வயது -33) என்பவரே கைது செய்யப்பட்டிருக்கிறார் என விசாரணைகள் மூலம் தெரியவந்திருக்கிறது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப் பொருள் கடத்த முயன்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கையைச் சேர்ந்த தமிழ் இளைஞரான ஜெயசீலன் என்பவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஏற்கனவே சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

அவரை கரூர் அகதிமுகாமில் தங்கியிருந்த சந்திரகுமார் என்பவர் தப்பிக்க வைக்கும்நோக்கில் அவருக்கு உதவுவதற்கு பிஸ்கட் பெட்டி ஒன்றில் கூரிய ஆயுதங்களை மறைத்து கொடுக்க முயன்ற வேளை கைது செய்யப்பட்டார் என்று கூறப்பட்டது. (சி)

# முகமாலை, மடு பகுதிகளிலிருந்து 22ஆயிரம் மக்கள் இடம்பெயர்வு

## செஞ்சிலுவைக் குழுவின் அறிக்கையில் தகவல்

கொழும்பு நவ. 23

கடந்த செப்ரெம்பர் மாதத்திலிருந்து முகமாலை மற்றும் மடுப் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்குமிடையில் நடைபெற்றுள்ள மோதல்கள் காரணமாக 22 ஆயிரம் மக்கள் தமது வசிப்பிடங்களை விட்டு வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளார்கள் என்று உள்ளூர் அதிகாரிகளை மேற்கோள்காட்டி சர்வதேசச் செஞ்சிலுவை குழு அறிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் வடபகுதியிலும் மன்னார் பகுதியிலும் இருதரப்புக்குமிடையில் கடந்த மாதம் மோதல்கள் நீடித்து வந்துள்ளன. முகமாலையில் மக்கள் குடியமராத பகுதிகளிலும் வவுனியாவுக்கு வடமேற்கில் மக்கள் செறிவு குறைந்த பகுதிகளிலும் மோதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வந்துள்ளன. இந்த மோதல்களால் இடம் பெயர்ந்துள்ள மக்களை உள்ளூர் அதிகாரிகளும், மனிதநேய அமைப்புகளும் பராமரித்து வருகின்றனவென்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேசச் செஞ்சிலுவை குழு விடுத்துள்ள ஒக்ரோபர் - நவம்பர் மாதத்துக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள மேலும் சில தகவல்கள் வருமாறு:-

ஓமந்தை உள்நுழைவு, வெளி அகல்வு பகுதிகளின் சுற்றாடலில் புலிகளதும் அரசபடைகளதும் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்றன. இதனால் பொதுமக்களுக்கும் செஞ்சிலுவை அதிகாரிகளுக்கும் இடையூறு ஏற்படலாகாது என்ற நோக்கில் ஒக்ரோபர் 18ஆம் திகதியும் நவம்பர் 5ஆம் திகதியும் கண்காணிப்பு நிலையம் மூடப்பட்டது. செஞ்சிலுவைக் குழு தற்காலிகமாக வாபஸ் பெறப்பட்டது. பின்னர் பொதுமக்களும் பொருள் ஏற்றி வரும் வாகனங்களும் இடையூறில்லாமல் போய் வர வேண்டும் என்பதற்காக வாரத்தில் ஐந்து நாள்கள் திறப்பதென்று முடிவு செய்யப்பட்டது. இதன் காரணமாக கடந்த நான்கு வாரங்களில் 26 ஆறாயிரத்துக்க மேற்பட்ட பொதுமக்களும் 8,900 வாகனங்களும் கண்காணிப்பு சாவடியைக் கடந்து சென்றுள்ளனர்.

நிலைமை தொடர்ந்தும் பரபரப்பாகவே காணப்படுகின்றது என்று கொழும்பிலுள்ள ஐ.சி.ஆர்.சி. தலைமை அலுவலகத் [illegible] கூறியுள்ளார். உள்நுழைவு வெளிஅகல்வு கண்காணிப்பு மையம் திறந்திருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இரு பகுதிகளிலுமுள்ள மக்கள் அவ்வப்போது சந்தித்துக் கொள்ளவும் இரு பகுதிகளுக்குமிடையில் மனிதாபிமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்கும் வர்த்தக பொருள்கள் பரிமாறிக் கொள்ளவும் இது அவசியமாகின்றது என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள மக்கள் தற்போது தங்கியுள்ள வவுனியா, மன்னார் பகுதிகளில் செஞ்சிலுவை உறுப்பினர்கள் தண்ணீர் விநியோகம் மற்றும் சுகாதார நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றார்கள். மன்னார் மாவட்டத்தில் தற்போது 11,200 இடம்பெயர்ந்த மக்கள் இருப்பதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர், பெரும்பாலானவர்கள் உறவினர்கள், நண்பர்களின் வீடுகளிலும் ஏனையோர் முகவர் அமைப்புக்களால் பராமரிக்கப்படும் 13 வெவ்வேறு இடங்களிலும் இருந்து வருகிறார்கள்.

இந்த மக்கள் அடுத்த ஜனவரி அல்லது பெப்ரவரி மாதம் வரை அதே இடங்களில் இருப்பார்கள் என்று அதிகாரிகள் கருதுகிறார்கள் என்று கொழும்பில் தண்ணீர் மற்றும் குடியிருப்பு ஒருங்கிணைப்பாளராக விருக்கும் ஜீவி பாரான்ட் தெரிவித்துள்ளார். இதனால்தான் நாம் கடந்த மாதம் விநியோகிக்கப்பட்ட கூடாரங்களைப் படிப்படியாக ஓலைக் குடிசைகளாக மாற்றிவருகின்றோம். மழைக்காலத்தில் இவை தாக்குப் பிடிக்கக் கூடியவையாகவிருக்கும் என்றார் அவர். (ப)


நீங்கள்,

நீரிழிவு நோயினால் அவதிப்படுகிறீர்களா? இதோ உடன் நிவாரணி

"மதுமேகரணி"
MADHUMEAHAHARANEE

இந்த மருந்தின் பாலபலனை குறுகிய காலத்தில் அறிந்துகொள்ளலாம். உங்கள் அண்மையில் உள்ள சித்தஆயுர்வேத டாக்டரிடம் ஆலோசித்துப் பாவியுங்கள். இது ஓர் அரச ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத் தயாரிப்பு.

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

SRILANKA AYURVEDIC CORPORATION,
Po. Box 20, Nawinna,
Maharagama.
(சி/54170)

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)



WUSC NVDAG

தொழில்சார் பயிற்சிநெறிகள் 2007/2008

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் (WUSC) நிதி அனுசரணையுடன் அறவழிப் போராட்டக் குழுவினால் (NVDAG) 2007/2008 இல் பின்வரும் பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளுக்கான பிரதான போதனாசிரியர்கள்/ உதவிப் போதனாசிரியர்கள் தேவைப்படுகின்றனர். குறித்த பயிற்சிநெறிகளைக் கற்பிக்கக்கூடிய தகுதியும் தராதரமும், அனுபவமும் கற்பித்தல் திறமையும் கொண்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) ரீவி ,றேடியோ திருத்துதல் பயிற்சி (1 வருடம்)
2) கணனி வன்பொருள் பயிற்சி (6 மாதம்)
3) மோட்டார் சைக்கிள் திருத்துதல் பயிற்சி (6 மாதம்)
4) அலுமினியம் பொருத்துதல் பயிற்சி (6 மாதம்)
5) கையடக்கத் தொலைபேசி திருத்துதல் பயிற்சி (6மாதம்)

பொருத்தமானவர்கள் தமது விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு 05.12.2007 இற்கு முன் அனுப்பிவைக்கவும்.

செயலாளர்
அறவழிப்போராட்டக் குழு,
29, கைதடி நுணாவில், சாவகச்சேரி.

அறவழிப்போராட்டக் குழு,
த.பெ.இல.2,
சாவகச்சேரி.

செயலாளர்,
அறவழி.

(68160)



'வீடற்றவன்' நாவலின்

கதைச் சுருக்கம் - விளக்கம் - விமர்சனம்



எல்லா வகை இலக்கியங்களும் படைத்த கலாபூஷணம் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியது.

இரண்டாம் பதிப்பு

ரூபா 75.00

(68165)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்




பிறப்பு 03 ✱ 11 ✱ 1941 | இறப்பு 23 ✱ 11 ✱ 1995 | பிறப்பு 18 ✱ 08 ✱ 1983

அமரர் **கனகசபை சண்முகசுந்தரம்**

செல்வன் **சண்முகசுந்தரம் சிவரூபன்**

ஈராறு ஆண்டுகள் அசைந்து கடந்தாலும்
மாறாது நீவிர் மனத்துள் நிறைந்தீர்
நின்று நிலைக்கும் உங்கள் நாமம்
என்றும் வாழும் எம்மோடு.

29, ஒட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (சி/54440)

குடும்பத்தினர்.

## சேவை நலன் பாராட்டு விழா



நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த 26 வருடங்களாக கூட்டுறவுச் சேவையாற்றி மிக நீண்ட வருடங்களாக கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க கிளை - நல்லூர் ப.நோ.கூ. சங்க நிர்வாகசபையிலும் பல உயர் பதவிகளை வகித்து ஊழியர்களுக்கு சேவையாற்றி இளைப்பாறிச் சென்ற

தோழர்

**திரு.குமாரசாமி அருள்நாயகம்**

*(கிளை - முகாமையாளர்)*

அவர்களுக்கு நாளை (24.11.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க கிளையின் தலைவர் தோழர் திரு.செ.செல்வக்குமாரன் அவர்களின் தலைமையில் திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் இவரது கூட்டுறவுச் சேவையைக் கௌரவித்து எமது தொழிற்சங்கத்தினால் ஒரு சேவைநலன் பாராட்டு விழாவை நடத்தி விழா நாயகரை பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

கிளை - நல்லூர்
ப.நோ.கூ.சங்கம் **கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்**

(68139)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் (BMICH) இன்று 23.11.2007 இல் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) சான்றிதழ் பெறும்

**விஜிதா இராமச்சந்திரன்**

(நிதி உதவியாளர், வலயக்கல்வி அலுவலகம்)

அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் சிறப்புற அன்புடன் வாழ்த்துகின்றோம்.

(68127) **அம்மம்மா, அம்மா, சித்தி, சகோதரிகள்.**

## ஐந்தாண்டிலும் ஆறாத துயரங்கள்...

குலத்தின் ஒளிவிளக்காய் 15 ✱ 10 ✱ 1944



நிறைந்திட்ட திருவிளக்காய் 18 ✱ 11 ✱ 2002

அணையாத ஜோதி

அமரர் **முருகேசு குணநாயகம்** M.G.M

(பிரபல ஆயுர்வேத வைத்தியர்)

ஆண்டவன் அணைத்தபோது அறியவில்லை நம் துயரத்தை
பாரினில் படைத்ததற்கு பரிசுதான் எமக்கு சோதனையா?
எம்மோடு கலந்திட்ட உங்கள் நிழல் நிஜமாக...
புதிய பிறப்பெடுத்து வாருங்களப்பா!

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். 

மீளாத்துயருடன்-
சு.ரோசமலர் (மனைவி),பிள்ளைகள். (68136)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 48 வயது, இளமை தோற்றமுடைய கௌரவமான தொழில் புரியும் ஒருவருக்கு வாழ்க்கைத்துணை ஒன்றை அவரது சகோதரர் தேடுகிறார். விதவைகள், பிள்ளைகள் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். முழுவிவரத்துடன். உதயன், மே/பா, விளம்பர இல. 3028, யாழ்ப்பாணம். (68155)

## யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

பழைய மாணவர் சங்க

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் நாளை மறுதினம் ஞாயிறு (25.11.2007) பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெற உள்ளது. அனைத்து 18 வயதிற்கு மேற்பட்ட பழைய மாணவர்களையும் முன்னாள் ஆசிரியர்களையும் தவறாது சமுகமளிக்குமாறும், தற்போதைய பழைய மாணவப் பெற்றோர்கள் கண்டிப்பாக சமுகம் தருமபடியும் கேட்டுக்கொள்கின்றேன்.

(f/54451) அதிபர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

உலகோடு 18 ✱ 08 ✱ 1940



இறையோடு 24 ✱ 10 ✱ 2007

அமரர் **கந்தையா குணரத்தினம்**

திதி: 23.11.2007

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து - வானுறை
தெய்வத்தின் திருப்பாதம் நீர் ஏகி, திங்கள் ஒன்று ஆனதுவே!
எமை வழிகாட்டிய தெய்வமே உமை நினைத்து தினம் வாழ்வதுமே
சுமையான இதயத்துடன் உம் சாந்திக்காகவே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி

687/28, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். (68104)

## ஐந்தாம் ஆண்டு நினைவுகள்



**அண்ணா இராஜேந்திரம்**

B.A (Cey.)

(ஓய்வுபெற்ற பதிவாளர், மேல்நீதிமன்றம் யாழ்ப்பாணம்)

மண்ணில் 13 ✱ 09 ✱ 1942

விண்ணில் 18 ✱ 11 ✱ 2002

திதி: 23.11.2007

அன்பின் உறைவிடமாய் அணையா அகல்விளக்காய்
பண்பின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
பார் போற்றும் தங்களை என்னென்றும் நினைவில்நிறுத்தி
நீங்காத நினைவுகளுடன் வணங்கி நிற்கும்.....

மனைவி,
பிள்ளைகள்: தேன்மொழி, தமிழினி
மருமகன் : வாமதேவன்
பேரன்: தசாரகன்.

K.K.S. வீதி,
சுன்னாகம். (68163)

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற அங்கத்தவரும் சாவகச்சேரி ஐங்கரன் ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான

**சின்னத்தம்பி சற்குணநாதன்**

19.11.2007அன்று லண்டனில் காலமானார். அன்னாரின் மறைவுக்கு எமது மன்றம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது.

**கைத்தொழில் வணிகர் மன்றம்,**
சாவகச்சேரி.

(சி/54453)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி

**துரைசிங்கம் சாரதாதேவி**

பிறப்பு 24.09.1947 | இறப்பு 23.10.2007

அன்பின் திருவுருவே அம்மா!
ஆடி அடங்கிய உன் வாழ்கை
ஒரு மாதம் கண் இமைப்பொழுதில்
ஓடி மறைந்தாலும் என்றும் எம்துயர்
மாறாதம்மா.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

இல.159, பிரதான வீதி,
கோமரங்குளம், வவுனியா!
T.P 024 4589778 (68100)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரிசிவலிங்கம்

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சிவலிங்கம் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சிவலிங்கத்தின் (முன்னாள் தனாதிகாரி, உரும்பிராய், சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சி.சிவதாசன் (முன்னாள் லிகிதர், H.N.B) அவர்களது அன்புத் தாயாருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நேற்று (22.11.2007) வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்றன.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

திருநெல்வேலி,
உரும்பிராய். 

தகவல்:
K.T.V சண்முகநாதன் (மருமகன்). (f/54454)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

**அன்னம்மா நடராஜா**

(பிளக் - 25, தெலுக் பிளாங்கா கிரசன்ட், சிங்கப்பூர் - 090025)

தோற்றம் 09 ✱ 06 ✱ 1927

மறைவு 24 ✱ 10 ✱ 2007

நீங்கள் எம்மைப் பிரிந்து திங்கள் ஒன்று ஆனாலும்
தீராது எம்துயரம் எம் நினைவில் வாழ்வீர்கள் நிதமும்.

பிரிவால் துயருறும்:
சகோதரி, மைத்துனி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

88, யாழ் வீதி,
யாழ்ப்பாணம். (68162)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஆட்சியின் நாணயக்கயிறை பிடித்திருக்கும் அதிகாரக் குழு

'த லீடர்' வெளியீட்டகத்தின் அச்சகத்துக்குள் புகுந்து நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதல் குறித்து கண்டனம் தெரிவித்திருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அது தொடர்பாகத் தாம் விடுத்த ஆங்கில அறிக்கையில் ஒரு வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொண்டிருக்கிறார். அது இந்தச் சந்தர்ப்பத்தில் கவனிக்கத்தக்க ஒன்றாக இருக்கின்றது.

''இன்று நாட்டை ஆளும் கும்பலினால் (Junta) ஜனநாயக விழுமியங்களுக்கு மற்றோர் பேரடி விழுந்திருக்கின்றது'' - என்று இந்தத் தாக்குதல் சம்பவத்தை விமர்சித்திருக்கின்றார் அவர்.

இந்த விமர்சனத்துக்கு அவர் தேர்ந்துள்ள சொல் 'Junta'. இது கவனிக்கத்தக்க ஓர் அம்சமாகும்.

ஆட்சி அதிகாரத்தைப் பலாத்காரம் மூலம் அல்லது கிளர்ச்சி மூலம் கைப்பற்றி வைத்திருக்கும் ஓர் இராணுவக் குழுவையே 'Junta' என்று அழைப்பர்.

'த லீடர்' வெளியீட்டக அச்சகசாலை மிக உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்திருக்கின்றது. விமானப் படைக்குச் சொந்தமான பல விமானங்கள் அருகில் உள்ள இரத்மலானை விமானத் தளத்தில்தான் தரித்து நிற்கின்றன. அந்தப் பிரதேசத்துக்குள் எவரும் இலகுவாக நுழைந்து வெளியே வரமுடியாது. அதுவும் சுமார் பதினைந்து பேரைக் கொண்ட - ஆயுதம் தாங்கிய - குண்டர் குழு ஒன்று இத்தகைய உயர் பாதுகாப்புப் பிரதேசத்துக்குள் சர்வ சாதாரணமாகப் போய், இத்தகைய அத்துமீறல் அராஜகத்தைப் புரிந்துவிட்டு, சாவகாசமாகத் திரும்பிச் சென்றிருக்கின்றது என்றால் அது பாதுகாப்பு அமைச்சினதும் ஆட்சி நிர்வாகத்தினதும் அனுமதியின்றி நடக்கக்கூடிய காரியமேயல்ல என்று சுட்டிக்காட்டுகின்றார் எதிர்க்கட்சித் தலைவர்.

அதனால்தான் இந்தக் காரியங்களைப் பின்னின்று நடத்தும் குழுவினரை, ஆட்சி அதிகாரத்தை கிளர்ச்சி மூலம் கைப்பற்றி வைத்திருக்கும் இராணுவக் கும்பலைக் குறிப்பிடும் 'Junta' என்ற பெயரில் தாம் குறிப்பிடுகின்றார் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விளக்கியிருக்கின்றார்.

நாட்டின் ஆட்சி அதிகாரம் அரசிடம் - அதாவது அமைச்சரவையிடம் - என்று வெளிப்படையாகக் கூறிக் கொண்டாலும், உண்மையில் அதுவல்ல யதார்த்த நிலைமை என்பதே இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

நாட்டை நிர்வகிக்க 109 அமைச்சர்கள் இருந்தாலும் பல்வேறு முக்கிய அமைச்சுகளும் அதிகாரங்களும் ஜனாதிபதியாகிய ஒருவரிடமே குவிந்து கிடக்கின்றன.

ஏற்கனவே அரசமைப்பின் பிரகாரம் நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியிடம். முப்படைகளின் தளகர்த்தரும் அவரே. அதே சமயம் நிதி அமைச்சு முதல் அதிக நிதி புரளும் பாதுகாப்பு அமைச்சு, சமுர்த்தி விவகார அமைச்சு போன்றவை வரை பெரும்பாலான அமைச்சுகளின் அதிகாரம் ஜனாதிபதியின் கைகளிலேயே உள்ளன. அதேசமயம் ஒரு பொம்மை அமைச்சரவை பெயருக்குச் செயற்படுவதும் அப்பட்டமாகத் தோற்றுகின்றது.

ஜனாதிபதியைச் சூழவும் அவரைச் அவரைச் சுற்றியும் இருக்கும் ஒரு குழுவினரால் - இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் ஜனாதிபதி மஹிந்தர் மற்றும் அவரது சகோதரர் அணியினால் - மட்டுமே பெரும்பாலான அதிகாரங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்பதே கொழும்பு அரச நிர்வாகத்தின் யதார்த்த நிலையாகும்.

பிரதமர் முதல் 109 அமைச்சர்கள் வரை தலைவர்கள் இருந்தாலும் அவர்கள் எல்லோரும் வெறும் பெயருக்குத் 'தலை'களாகவே இருக்கின்றனரே தவிர, தலைவர்களுக்குரிய அதிகாரங்களைப் பிரயோகிப்பவர்களாக இல்லை என்பதே உண்மை நிலைமை.

இத்தகைய ஒரு சிறு வட்டத்தினால் - குழுவினால் - ஆட்சி அதிகாரம் பிரயோகிக்கப்படும் நிலையிலேயே 'த லீடர்' வெளியீட்டு அச்சகசாலை மீதான தாக்குதல் போன்ற - ஜனநாயகத்துக்கும், மனித உரிமைகளுக்கும், கருத்து வெளியிடும் சுதந்திரத்துக்கும் பேரிடி தரும் - நிகழ்வுகள் இத்தேசத்தில் இடம்பெறுகின்றன.

நாடாளுமன்றில் ஓர் எம்.பி. சுயாதீனமாகச் செயற்படுவதை அச்சுறுத்தி, மிரட்டித் தடுப்பதற்காக அவரது உறவினர் ஆயுத முனையில் கடத்தப்பட்டு பணயம் வைக்கப்படுகின்றார். கடத்தல்காரர்களின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து சம்பந்தப்பட்ட எம்.பி. செயற்பட்டதனால் பணயம் வைக்கப்பட்ட அந்த உறவினர் பின்னர் விடுவிக்கப்படுகின்றார்.

ஒரு சிறு உயர்மட்டக் குழாம் நாட்டின் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்து வைத்துக்கொண்டு நிர்வகிக்க, அதன் கீழ் இத்தகைய அராஜகங்களும் கொடூரங்களும் தொடருமாயின் இதனை 'Junta' ஆட்சி என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விமர்சிப்பதில் தப்பு இல்லை என்றே தோன்றுகின்றது.

நாட்டின் சிறுபான்மையினரான தமிழர்களுக்கு எதிராக - தமிழர் தேசத்துக்கு எதிராக - பெரும் இராணுவ முஸ்தீபு நடவடிக்கைகளை மேற்கொண்டபடி - அதன்மூலம் நாட்டின் பெரும்பான்மை சிங்களவர்களை ஏமாற்றித் திருப்தி செய்வதாகக் கருதிக்கொண்டு - தன் ஆட்சி அதிகாரத்தைக் கொண்டிழுக்கிறது இந்த சிறிய அதிகார வட்டக் குழு.

அரசியல் தலைமைகளை - அல்லது அரசியல் கருத்துருவ நிலைப்பாடுகளை - ஓரங்கட்டி ஓடும் இக்குழுவினரின் போக்கால் நாடு எதிர்நோக்கப் போகும் விபரீதத்துக்கான கட்டியமாக 'த லீடர்' வெளியீட்டகம் மீதான இந்த நாசகாரத் தாக்குதலைக் கருதமுடியும்.

## கூடுதல் விலைக்கு பொருள்களை விற்றதாக முறைப்பாடு:

# இரு ப.நோ.கூ. சங்க முகாமையாளர்களை இடைநிறுத்த அரச அதிபர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ.23

யாழ். செயலகத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளைவிட கூடுதல்விலைக்கு பொருள்களை விற்பனை செய்ததாகக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து, ப. நோ. கூ. சங்கங்கள் இரண்டினது பொது முகாமையாளர்களை சேவையில் இருந்து இடை நிறுத்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தலை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு யாழ். அரச அதிபர் கே. கணேஷ் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அரச அதிபர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புலோலி ப.நோ.கூ. சங்கத்தினால் பால்மா நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் பார்க்க அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பாகவும், சங்கானை ப.நோ.கூ. சங்கத்தினால் கோதுமை மா ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட விலையில் இருந்து 15.11.2007இல் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட வேண்டும் என மாவட்டச் செயலகத்தினால் அறிவுறுத்தப்பட்டபோதும் அதன் பிரகாரம் இன்றுவரை அதனை நடைமுறைப் படுத்தாமை தொடர்பாகவும் ஆக்கபூர்வமான தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

இது தொடர்பாக விசாரணையொன்றை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும், இவ்விரு சங்கங்களின் பொது முகாமையாளர்களையும் உடனடியாக இடைநிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பணிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் இச் சங்கங்களின் நிர்வாகச் செயற்பாடுகளைச் சீரான முறையில் இயங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறும் அவர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

ஏனைய ப. நோ. கூ. சங்கங்களும் உரிய அறிவுறுத்தல்களைப் பின்பற்றத் தவறின் நிர்வாக ரீதியான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (அ-1)

# ஒக்ரோபர் மாதத்துக்கான நிவாரண விநியோகம் 29இல்

யாழ்ப்பாணம், நவ. 23

குடாநாட்டில் இடம்பெயர்ந்த மற்றும் நலிவுற்ற குடும்பங்களுக்கான ஒக்ரோபர் மாதத்துக்கான நிவாரணமும் ஒக்ரோபர் மாதத்துக்கான சமுர்த்தி நிவாரணமும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த விநியோகங்களுக்கான பொருள்களுக்கான வழங்கற்கட்டளைகளை நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் செயலக புனர்வாழ்வு செயலகத்தில் பெற்று, விநியோகத்தை எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பிக்குமாறு சகல ப.நோ. கூ. சங்கங்களையும் அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (அ-1)



அவிசாவளை காட்டகத்தகவில் புதிதாகக் கட்டப்பட்ட இரண்டு மாடிக் கடைத் தொகுதிக் கட்டடம் ஒன்று நேற்றுக்காலை திறந்துவைக்கப்படுவதற்கு சற்று நேரத்துக்கு முன்னர் மண்ணுக்குள் புதையுண்டது. அதன் இடிபாடுகளில் சிக்கி இரு சிறுவர்கள் உட்பட மூவர் படுகாயமடைந்தனர். அங்கு மீட்புப் பணிகள் இடம்பெறுவதைப் படத்தில் காணலாம்.

# இராணுவப் பயன்பாட்டு உணவு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு முன்னரும் என்னால் சுட்டிக் காட்டப்பட்ட 'யுனிசெவ்' நிறுவனத்தின் ஜெனிபர் டேலர் என்ற பெண்மணியால் அனுமதிக்கப்பட்டு இராணுவ வீரர்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் 54,800 அமெரிக்க டொலர் பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் கொண்ட விசாலமான கொள்கலனொன்று இலங்கைக்கு வரவழைக்கப்பட்டுள்ளது. இந்த உலர் உணவு வகைகள் முழுவதும் 40 அடி நீளமான கொள்கலனொன்றுக்குள் வைத்து, சீதுவையில் உள்ள 'கிளோபல் பார்க்கில்' இருக்கும் 'யுனிசெவ்' கிட்டங்கிக்கு - ஜெனிபர் டேலரின் கோரலுக்கு ஏற்ப - பிரான்ஸிய இராணுவத்துக்குப் பொருள்களை வழங்கும் நிறுவனமொன்றின் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளன.

அவசர நிலைகளின்போது வடக்கு - கிழக்கில் சேவையாற்றும் ஐ.நா. சபையின் ஊழியர்களின் நுகர்வுக்காக எனக் கூறிக்கொண்டு ' Economat Des Armees' என்ற பிரான்ஸிய நிறுவனமொன்றிடமிருந்து அவர் இந்த உணவுப் பொருள்களை வரவழைத்துள்ளார். மேற்படி நிறுவனம் பிரான்ஸிய பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் ஓர் அமைப்பாகும்.

*இது பொதுவான நடைமுறையல்ல*

மோதல் நிலைமைகள் உக்கிரமடையும் பிரதேசங்களிலிருந்து தமது ஊழியர்களை அப்புறப்படுத்தி, பாதுகாப்பான பிரதேசமொன்றுக்கு அழைத்துச் செல்வதே ஐ.நாவின் வழமையாகும். அவ்வாறின்றி, மோதல் உக்கிரமடைந்திருக்கும் பிரதேசங்களிலுள்ள தமது ஊழியர்களை ஆபத்துக்குள்ளாக்குவதோடு அவர்களது பயனீட்டுக்காக உண்பதற்குத் தயாராக வைத்திருக்கும் உலர் உணவுப் பொதிகளைப் பெற்றுக்கொடுக்கும் முறையொன்றைப் பொதுவாகக் கடைப்பிடிப்பதில்லை.

உண்மையிலேயே இந்த உணவுகள் சாதாரண சிவில் நபர்களின் பயனீட்டுக்கு எடுத்துக் கொள்வதில்லை. அவை இராணுவத்தின் பிரயோசனத்துக்கே எடுத்துக்கொள்ளப்படுகின்றன. பொதுவில் இந்த உணவுப் பொருள்கள் கெரில்லா போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் இராணுவக் குழுக்களுக்கே தேவைப்படும். இந்த உணவுப் பொதிகள் ''COMBAT RATION'' அல்லது 'யுத்தக் கூப்பன்' என அழைக்கப்படுவது அதனால்தான். இலங்கை சுங்கத்தைத் தவறாக வழி நடத்துவதற்காக 'யுனிசெவ்' அமைப்பு இறக்குமதிக்கான ஆவணங்களில் 'உண்பதற்குத் தயாரான உணவு' (READY TO EAT MEAL) என இந்தப் பொதிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. சுங்கத் திணைக்களத்தை மட்டுமல்ல, பாதுகாப்புப் பிரிவுகளையும் தவறாக வழி நடத்துவதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. இந்த உணவுப்பொதிகளைக் கொண்ட கொள்கலன் 'யுனிசெவ்' லேபலின் கீழ் பசுமைச் சனலின் ஊடாக சுங்கத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டதால் அதனைச் சோதனைக்குட்படுத்தவுமில்லை.

இந்த உணவுப் பொதிகளில் 1,410 மேற்கத்திய உணவு வகைகளாகக் கொண்ட பொதிகளும் இந்து தனித்துவத்துக்கு ஏற்ப 1,410 பொதிகளும் மேலும் 1,410 பொதிகள் 'ஹலால்' என்ற குறிப்போடும், 1,410 பொதிகள் காய்கறி உணவாகவும் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த உணவுத்தொகை ஐ.நா. ஊழியர்களின் பயனீட்டுக்கு அல்லவென்பதை அறிந்துகொள்வதற்கு மேற்படி நாம் கூறிய விடயங்கள் போதுமானவையாகும். ஐ.நா. ஊழியர்களுக்கு உணவு தேவைப்படுமாயின் அவற்றைப் பிரான்ஸிய பாதுகாப்பு அமைச்சுக்குச் சொந்தமான இராணுவ நடவடிக்கைகளுக்காக மாத்திரமே அமைக்கப்பட்டிருக்கும் 'ECONOMAT DES ARMEES' என்ற பெயரிலான நிறுவனமொன்றிடமிருந்து விலை கொடுத்து வாங்க வேண்டிய தேவை இருக்கின்றதா? தமது ஊழியர்களுக்கு 'யுத்த கூப்பன்' வகையைச் சேர்ந்த - உடன்உண்ணக்கூடிய - உலர்உணவை உண்ணக் கொடுக்குமளவுக்கு இலங்கை சில நாள்களில் தள்ளப்படக்கூடுமென 'யுனிசெவ்' முக்கியஸ்தர்கள் முடிவுக்கு வந்திருக்கின்றனரா? அவசர நிலைகளின்போது கூட சமைப்பதற்குத் தகுதியான உணவைப் பெற்றுக்கொள்ள முடியாதளவுக்கு இலங்கை ஆளாகியிருப்பதாக ஐ.நா.சபை முடிவெடுத்திருக்கின்றதா?

உண்மையிலேயே 'யுனிசெவ்' நிறுவனத்தின் ஜெனிபர் டேலர் இந்த 'யுத்தக் கூப்பன்' வகையைச் சேர்ந்த உலர் உணவுத் தொகையை வரவழைத்திருப்பது தனது ஊழியர்களின் பயனீட்டுக்கல்ல. சந்தேகமின்றி அவை புலிப் பயங்கரவாதிகளுக்கே பெற்றுக்கொடுக்கப்படும். இந்த 'யுத்த கூப்பன்' வகையைச் சேர்ந்த உணவு தேவைப்படுவது, ஒன்றில் இலங்கை இராணுவத்துக்கு அல்லது புலிப் பயங்கரவாதிகளுக்கு.

இலங்கை இராணுவத்தை களங்கப்படுத்தும் சர்வதேச நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் ஐ.நா. சபைக்கு 'யுத்த கூப்பன்' வகையைச் சேர்ந்த உணவுவகைளை வரவழைத்து அரச இராணுவத்துக்குப் பெற்றுக் கொடுக்கும் விசேட தேவையொன்று இல்லையென்பது மிகத் தெளிவு. எனவே, இவை கொண்டு வரப்பட்டிருப்பது புலிப் பயங்கரவாதிகளுக்குக் கொடுப்பதற்குத்தான் என்பது இதன் மூலம் உறுதியாகின்றது.

### நாட்டைவிட்டு வெளியேற்றவேண்டும்

ஜெனிபர் டேலர் போன்ற புலிகள் சார்பானவர்களை நாட்டை விட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுப்பதன் மூலம், இவர்களது இந்த பயங்கரவாத சார்பு நடத்தைக்கு எச்சரிக்கை விடுக்க வேண்டும். அதேபோன்று கிளிநொச்சி, வன்னி மற்றும் கொழும்புக்குமிடையிலான அவர்களது கணக்கு வழக்குகளை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இந்த நிலைமையின் கீழ் அவர்களது கிளிநொச்சி அலுவலகத்தைத் தற்காலிகமாக மூடிவிடுவது நல்லதென்பதே எமது கருத்தாகும்.

எவ்வாறான நடவடிக்கையை எடுத்தாவது இந்த சர்வதேச சதியாளர்களின், புலிகளைத் தாலாட்டும் சூழ்ச்சியைத் தடுத்து நிறுத்த வேண்டும். அதற்காகப் பிரபலமானதும் முறையானதுமான நடவடிக்கைகள் எடுக்காமல், தீரமிக்க பாதுகாப்புப் படைகள் மேற்கொண்டிருக்கும் பிரிவினைவாத பயங்கரவாதப் போராட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ய முடியாது. ரி.ஆர்.ஓ. விடயத்தில் தாமதித்தாவது தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்ததைப்போன்று, இந்த சர்வதேச புலிக் கோஷ்டிகளின் விடயத்திலும், உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாம் அரசுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். - என்று தெரிவித்தார். (சி)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை - 08 | சனிக்கிழமை 24.11.2007 |
| திதி : பூரணை | மு.இ. 08.55 பூரணை விரதம் |
| நட்சத்திரம் : | கார்த்திகை பின்னிரவு 12.45 |
| [illegible] | [illegible] - 04.41 |
| ராகுகாலம் | : 09.11 - 10.41 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரிமலை ஐயப்பன் ஆலயத்தில் வெடிகுண்டு வைத்ததாகப் புரளி!

திருவனந்தபுரம்,நவ.23

கேரள மாநிலம், சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு பெரும் பதற்றம் தொற்றிக்கொண்டது.

எனினும், நீண்ட நேரம் இடம்பெற்ற சோதனை நடவடிக்கையின் பின்னர் அது வெறும் வெடிகுண்டுப் புரளி எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கோழிக்கோடு பொலிஸ் ஆணையாளர் பல்ராம் குமார் உபாத்தியா என்பவர் அலுவலகத்துக்குத் தொலைபேசி அழைப்புக் கிடைத்தது என்றும்-

அதில் பேசிய மர்ம நபர், 'சபரிமலையில் வெடிகுண்டு வைத்திருக்கிறோம். மாலை 3.30 மணிக்குள் வெடிக்கும்'

- என்று கூறிவிட்டு அழைப்பைத் துண்டித்துவிட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த அழைப்பு சவூதி அரேபியாவின் தலைநகர் ரியாத்திலுள்ள நசீம் என்ற பகுதியிலிருந்து ஏற்படுத்தப்பட்டதாக தெரியவந்தது.

உடனே, சபரிமலையில் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள பொலிஸாருக்கு வெடிகுண்டுமிரட்டல் பற்றித் தகவல் கொடுக்கப்பட்டது. சந்நிதானம் பகுதியில் நின்றிருந்த பக்தர்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டு கோயில் வளாகத்தில் சோதனை நடத்தப்பட்டது. குண்டு எதுவும் சிக்கவில்லை. அது புரளி என இறுதியில் பொலிஸார் அறிவித்தனர். (சி)

## தொழில்நுட்ப ஊழியர் வரணியில் சுட்டுக்கொலை

சாவகச்சேரி பிரதேச சபையின் தொழில்நுட்ப ஊழியர் நேற்றுமுன் தினம் வரணிப் பகுதியில் வைத்து இனந் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தாவளை, இயற்றாளையைச் சேர்ந்தவரான இவர் தனது குடும்பத்தினருடன் பருத்தித்துறை, தம்பசிட்டிப் பகுதியில் வசித்து வந்தார்.

வேலையின் நிமித்தம் சென்ற போதே வரணிப் பகுதியில் வைத்து சுடப்பட்டதாகக் கூறப்பட்டது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பத்தில மூன்று பிள்ளைகளின் தந்தையான வேலுப்பிள்ளை சபாபதிப்பிள்ளை (வயது - 48) என்பவரே கொல்லப்பட்டவராவார். (அ-203-207)

# ஈழத்தமிழருக்கு 18 மாதச் சிறை

சென்னை,நவ.23

போலிக்கடன் அட்டையைப் பயன்படுத்தி 36 லட்சம் ரூபாவை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின்கீழ் ஈழத்தமிழர் ஒருவருக்குத் தமிழக சைதாப்பேட்டை நீதிமன்றம் 18 மாதகாலச் சிறைத்தண்டனைத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

கடந்த மே மாதம் நடுப்பகுதியில் குறித்த மோசடிக் குற்றச்சாட்டின்கீழ் ஈழத்தமிழரான ராஜசீலன் (வயது 33) என்பவரை மத்திய புலனாய்வுப் பொலிஸார் கைதுசெய்தனர். இவருடன் இவரது 5 சகாக்களும் கைதாகினர். 18 மாதகாலம் சிறைவாசம் அனுபவித்த அறுவர் மீதான வழக்கு சைதாப்பேட்டை 11ஆவது நீதிமன்றில் நடந்து வந்த நிலையில், ராஜசீலன் தனது குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ராஜசீலனுக்கு 18 மாதகாலச் சிறைத் தண்டனையும், 12 ஆயிரம் ரூபா அபராதத் தொகையையும் விதித்து நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்த நீதிபதி காருநாசினி, ஏலவே அனுபவித்த தண்டனைக் காலத்தை இதில் கழிக்குமாறும் உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து ராஜசீலன் நீதிமன்றால் நேற்றுமுன்தினம் விடுதலையானார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், தமிழக அரசின் உத்தரவுக்கமைய அவர் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றார் எனத் தமிழக நாளேடுகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. (சி)

## முகமாலை, திருமலையில் படைகள் - புலிகள் மோதல்

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நேற்றும் புலிகளுக்கும் படைகளுக்கும் இடையே ஆங்காங்கே கடும் சமர் மூண்டது என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.முகமாலை முன்னரங்கப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் 6 விடுதலைப்புலிகள் பலியாகினர் என்றும் -

திருகோணமலை பட்டித்திடல் பகுதியிலும் நேற்று அதிகாலை நடந்த மோதலில் இரு புலிகள் உயிரிழந்தனர் என்றும் -

இரு சம்பவங்களின்போதும் பெருமளவு வெடிபொருள்கள் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டன என்றும் - படைத்தரப்புத் தகவல்கள் தெரிவித் தன.

எனினும், இச்சம்பவங்கள் குறித்துப் புலிகள் தரப்புத் தகவல்கள் எவையும் நேற்று மாலைவரை கிடைக்கப்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## இலங்கையரின் விடுதியில் கட்டாரில் தீ விபத்து

கொழும்பு, நவ.23

டோஹா, கட்டாரில் 33 இலங்கையர்கள் தங்கியிருந்த விடுதி ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. எனினும் இலங்கையர் எவருக்கும் உடற் பாதிப்பு ஏற்படவில்லை. அவர்களின் உடைமைகளில் ஒரு பகுதியே எரிந்து நாசமாகியுள்ளன.

தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை. கட்டார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

# ஈராக்கில் கைது செய்யப்பட்ட 21 இலங்கையரும் விடுவிப்பு

பக்தாத், நவ. 23

ஈராக்கில் அந்த நாட்டுத் துருப்புகளினால் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்ட 21 இலங்கையரும் நேற்றுமுன்தினம் இரவு விடுவிக்கப்பட்டனர் என்று நேற்று நடத்த அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹுசைன் பைலா தெரிவித்தார்.

ஈராக்கிலுள்ள அமெரிக்க ஒப்பந்த நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் 21 இலங்கையர், நேபாளத் தேசத்தவர்கள் 9 பேர், இந்தியர் ஒருவர், பிஜி நாட்டவர் இருவர் மற்றும் ஈராக்கியர் 10 பேர் என மொத்தம் 43 பேர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டிருந்தனர். (சி)

## தமிழர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும் என்றும் இந்த அமைச்சரவைக் கூட்டத் தில் தீர்மானிக் கப்பட்டது.

இலங்கையில் இயங்கும் ஏனைய அரச சார்பற்ற அமைப்புகளையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துடன் தொடர்புகளை வைத்திருக்க வேண்டாம் என்று கோருவது என்றும் இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்ததாகத் தெரியவந்தது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை இலங்கையில் தடை செய்வதற்கு அரசு முடிவு செய்திருப்பதாக அமைச்சரவைக்கு நெருங்கிய வட்டாரங்களை மேற்கொள்காட்டி நேற்றைய உதயனில் முதற் பக்கத் தலைப்புச் செய்தி வெளியானது தெரிந்ததே. (அ-உ)

## இலங்கைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டம் நடைபெற்றது.

இலங்கைக்கு இந்தியா ஆயுதங்களை வழங்கக்கூடாது என்று தமிழகம் முழுவதும் கையெழுத்து இயக்கங்களை நடத்தி அவற்றை புதுடில்லியில் பாதுகாப்பு அமைச்சரிடம் நேரில் கையளிப்பது என்றும் இந்திய நாடாளுமன்றம் முன் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அடுத்த மாதம் 14ஆம் திகதி அல்லது 17ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

தமிழின உரிமைக்கு எதிரிகள் யார்? என்ற தொனிப்பொருளில் விளக்கப் பொதுக்கூட்டங்களை அடுத்தமாதம் முதலாம் திகதி சென்னையிலும், 2ஆம் திகதி வேலூரிலும், 4ஆம் திகதி சேலத்திலும், 5ஆம் திகதி திருச்சியிலும், 6ஆம் திகதி பெரம்பலூரிலும், 7ஆம் திகதி ஈரோடிலும், 8ஆம் திகதி திருப்பூரிலும், 9ஆம் திகதி கோவையிலும் முதற்கட்டமாக நடத்துவது எனவும் அங்கு தீர்மானிக்கப்பட்டது. (சி)

## குடாநாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேர் தமிழர்கள் எனவும், 19 பேர் தென்னிலங்கையினர் எனவும் சுகாதார சேவை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ-50-51)

## புலிகளுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான அரசியல் நீரோட்டத்திலிருந்து முற்றாகத் தனிமைப்படுத்தப்பட்டு, ஒதுங்கிப் போகும் நிலையைத் தவிர்ப்பதற்காக தீர்வுத் திட்டத்தை உடன் வெளியிட்டு நடை முறைப்படுத்துமாறு இந்தியா இலங்கையைக் கேட்டுக் கொண்டது.

அதேசமயம், இலங்கை அரசு புலிகளு டன்பேசி, நாட்டின் ஆள்புல ஒருமைப்பாட்டுக்குள் தீர்வு ஒன்றைக் காண முயலவேண் டும் என்றும் இந்தச் சந்திப்பின்போது இந் தியா வலியுறுத்தியது எனக் கூறப்படுகின்றது.

*அதி உச்ச அதிகாரப் பரவலாக்கல்*

தமிழர்கள் தங்கள் மொழி, கலாசாரம் மற் றும் இனத்துவ அடையாளங்களைப் பேணிப் பாதுகாப்பதை உறுதி செய்யக்கூடிய- அதி உச்ச - அதிகாரப் பரவலாக்கல் தமிழர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்பதையே இந்தியா எதிர்பார்க்கின்றது என்பது இச்சந்திப்பின்போது இந்தியத் தரப்பால் தெளிவுபடுத்தப்பட்டது என்றும் கூறப்படுகின்றது.

''அதிகாரப் பகிர்வு உட்பட்ட அரசியல் நடவடிக்கைகள் குறித்து பிரணாப் முகர்ஜியுடனான சந்திப்பின்போது பேசப்பட்டது'' - என இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனையை சிபார்சு செய்வதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிக் குழு அந்த யோசனையை சிபார்சு செய்வதற்கான இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டது என்றும் -

அதனை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னோடியாக இந்த வருட முடிவுக்கு முன்னர் அது வெளியிடப்படும் என்றும் -

இந்தச் சந்திப்பின்போது இலங்கை வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார் எனக் கூறப்படுகின்றது.

''இலங்கை அரசு தனது வரவு - செலவுத் திட்டத்தை ஜே.வி.பியின் ஆதரவு இன்றியே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியிருக்கின்றது. அதேபோல, அதிகாரப் பகிர்வுத் திட்டத்துக்கும் ஜே.வி.பியின் சம்மதத்தைப் பார்த்துக் கொண்டிராமல் அதனை முன்னெடுக்க அரசு முன்வரவேண்டும்'' - என இந்தியா இந்தச் சந்திப்பில் இலங்கையை வற்புறுத்திக்கேட்டுக் கொண்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## 3 அதிரடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். இந்தத் தாக்குதலில் மூன்று விசேட அதிரடிப் படையினர் உயிரிழந்தனர் என்று புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்திருக்கின்றார். (உ)

## சிறிபதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பிச் சென்றிருக்கின்றனர். வீடு சிறிது சேதமுற்றிருக்கின்றது.

குண்டுவீச்சை அடுத்து வீட்டில் இருந்த காவலர்கள் வானத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்திருக்கின்றனர் என்றும் கூறப்பட்டது.

சம்பவம் நடந்தபோது சிறிபதி வீட்டில் இருக்கவில்லை. அவர் மங்கள சமரவீர எம்.பியின் வீட்டில் இருந்தார்.

குண்டுவீச்சுக்கு இலக்கான சிறிபதியின் வீட்டில் அவரது மனைவியும் பிள்ளைகளும் இருந்தபோதும் அவர்களுக்கு ஏதும் நேரவில்லை. (உ)

## கதிர்காமர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டமை மற்றும் சம்பந்தப்பட்ட விசாரணைகளை மூடி மறைக்கப்பட்டமை ஆகியவை குறித்தும், சம்பந்தப்பட்ட கொலைகாரர்களுக்குத் தண்டனை விதிக்கப்படாமை தொடர்பாகவும் விசாரிப்பதற்கு ஆணைக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென்றே கோரப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் அணியின் அமைப்பாளருமான சிறிபதி சூரியாராய்ச்சி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றிலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கிறார். (சி)

## ஊடக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை செல்வரட்ணம்



பூதர்மடம், நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்வரட்ணம் 21.11.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இளையபிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவநாதன், வட்சலகுமாரி (2ஆம் வருடம், விஞ்ஞானப்பிரிவு, கல்வியற்கல்லூரி யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வேலாயுதபிள்ளை, சின்னம்மா, வேலுப்பிள்ளை (கனடா), செல்வராணி, காலஞ்சென்ற சுப்பிரமணியம், அரியநாயகம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2007) நண்பகல் ஒரு மணியளவில் நல்லூரில் உள்ள தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*44/15, சங்கிலியன் வீதி,*
*நல்லூர்.*

தகவல்:
மனைவி, மகள்.

## சின்னத்தம்பி யோகராசா

(உரிமையாளர், ஆவரங்கால் ராஜயோகம் அழகுமாடம்)

மணற்பகுதி, புத்தூரைச் சேர்ந்த சின்னத்தம்பி யோகராசா நேற்றுமுன்தினம் (21.11.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தவிர்க்கமுடியாத காரணங்களால் நேற்று இடம்பெறவில்லை. இன்று (23.11.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்துக்காக ஆவரங்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மிதிலை,*
*மணற்பகுதி, புத்தூர்.*

தகவல்:
குடும்பத்தினர்.

இலகு தொடர் மீட்டலும் பரீட்சை வழிகாட்டலும் O/L 2007
அனைத்து பாடங்களுக்கான எதிர்பார்ப்பு வினா - விடைகளுடன்
வெளி மாணவர்களும் கலந்துகொள்ளலாம்.
ஆரம்பம்: சனி 9 a.m. Sci - E.J.K. யுபன்
தொடர்பு: I.B.S. கல்வி நிறுவனம், சுண்டுக்குளி.

CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
24.11.07 (Sat)
Diploma in Office Management (Ms Office)
Kid's Programmes (Grade 1- 8)
Certificate in Internet & E-Mail

College of Accounting
நாளை ஆரம்பம்
08 கம்பனி முடிவுக் க/கு
(Sat.& Sun 8-9 a.m)
09 கட்டுப்பாட்டு க/கு
(Sat.& Sun 9-10 a.m)
by- J.T. அழகன்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.11.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org